259

[பகுதி 5.] 1926ஸு ஜூன்மீ 1உ [பகுதி 5.

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசெல்வாம்பாள்" என்ற நாவல் தொடக்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசெல்வாம்பாள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச்சேர்ந்து சஞ்சிகைபெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0-வும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இச்சஞ்சிகை அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட நாவல்களடங்கியது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்குமாகையால் இதன் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்,"
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

போன்ற பற்கள். இத்தகைய அழகும் குணமுமுள்ள ஒருத்தியை ஒரு வாலிபன் கண்டால்......

உல:—நல்லது; நீ அழகிய படந்தீட்டுவதுபோல் இயற்கை லக்ஷணங்களை விளக்கமாகக் கூறுகிறாய்; ஆனால் முகம்?

அச்:—மிக்க அழகும் பளபளப்புமுடையது; கூந்தல் கருமையும் நெய்ப்புமுள்ளது.

இவற்றைக் கேட்டதும், உலகையனுக்குத் தன் சம்பந்தமான ஒரு இரகசிய விஷயம் மனதில் உதித்தது. அதனால் அது வெளிப்பட்டு விட்டதோவென்று நினைத்தான். அவ்வாறு நினைத்தும், "ஐயோ! கடவுளே! இரகசியம் வெளியாய் விட்டதோ? இதென்ன இது! நாம் அவசரப் படலாகாது; ஆனாலும் இவன் கூறும் அடையாளங்கள் சரியாயிருக்கின்றனவே; கூந்தலும் கருமை யென்கிறானே! வயதும் இருபத்திரண்டு என்கிறானே" என்று தனக்குள் சிந்தித்துக்கொண் டிருந்தான். அப்போது அவசரமாக,

அச்:—நீ என்ன சிந்திக்கிறாய்?

உல:—நான் உன்னிடம் அதைக் கூறலாகாது; அஃதுனக்கு மிக்க அவமானத்தை உண்டாக்கிவிடும்.

அச்:—உலகையா! நீ கூறாவிட்டாலும் நான் கூறிவிடுகிறேன்; ஒரு பெண் தனக்கு நேர்ந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் உனக்கு வசப்பட்டாள்; அதுமுதல் உன் மீதன்புடையவளாய்த் தன் கற்பையும் இழந்து விட்டாள்; அவள் வயிற்றிலும் ஒரு சிசு உற்பத்தியாயிருக்கிறது; அதற்கு நீயே தந்தையாயிருக்கிறாய்.

உல:—(மிக்க ஆச்சரியத்துடன் துள்ளி யெழுந்து) ஆ! அக்கா! அப்படியா?

அச்:—அப்படித்தான்; இஃதுண்மை; இப்பொழுது நான் சொல்வது உனக்குத் தெரிகிறது; என் தங்கை உன்னை

186505

எப்படி நேசித்திக்கிருளென்பதையும் நீ அறிந்து கொண்டாய். நீ இப்பொழுது ஒரு முக்கியமான ஒரு கடமையைச் செய்யவேண்டியவனு யிருக்கிருய்; நீ மிகவும் யோக்கியன்; ஆதலின் அக்காரியத்தை முடித்தே விடுவாய்.

இதைக் கேட்டதும் உலகையன் ஒன்றும் பேச முடியாதவனுய் மௌன முற்றிருந்தான்.

அச்:—நீ நல்ல வமிசத்தில் கலியாணம் செய்து கொள்ளப் போகிருய்.

உல:—அந்தப் பயங்கரமான இரவில் உனக்குத் துணையாக உன் தங்கை எப்படி அங்கே வந்தாள்?

அச்:—எப்படியா? அவளும், என் மனைவியும், ஒரு முகமூடி விருந்திற்குச் செல்ல உடையணிந்து கொண்டிருந்தார்கள். அச்சம்பவம் நிகழ்ந்தது என் தந்தையின் வீட்டில் என்று எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனுல் நீலாட்சி அதைப்பற்றிய விவரங்களை யெல்லாம் உனக்குச் சொல்லுவாள். திடீரென்று சண்டை யேற்பட்டதால் எனக்குத் துணையாக ஒரு ஆள்வேண்டியிருந்தது. ஜீவாம்பாள் எப்பொழுதும் மிக்க ஆச்சரியமான வீரத் தன்மை பொருந்தியவள்.

உல:—(முணுமுணுத்துக் கொண்டு) இது நல்ல வேடிக்கை! அச்சுதா! நான் சொல்வதைக் கவனி; நீங்கள் வேறு விஷயத்தில் ஒன்று சேர்ந்திருந்தால் அது எனக்குப் பெருமையாயிருக்கும்; ஆனுல்—

அச்:—நீ அந்த வார்த்தையை உபயோகிக்காதே; நீ ஜீவாம்பாளையே மணம்புரிந்து கொள்ளவேண்டும்; நீ அவளைக் கற்பழித்து விட்டாய்; அவளே உன்னை நாடினுளென்று நான் முன்னே சொன்னது பெருந்தவறு;

எனக்கு எல்லா உண்மையும் தெரியும்—,நீ பலாத்காரம் செய்தாய்—.

உல:—அவள் நடக்கையைப்பற்றி இழிவு கூற எனக்கிஷ்டமில்லை; என்றாலும் அவளை நான் எப்படி நினைக்கிறேன் என்றால்—.

அச்:—ஜாக்கிரதையாய்ப் பேசு; நீ முன் அவளைப்பற்றிக் கூறியதனாலேயே என் இரத்தம் கொதித்து கொண்டிருக்கிறது; கைதுடிக்கிறது; அவளுடைய மானம் உன்னால் போய்விட்டது; அவள் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு நீயே தகப்பனென்பதை நான் மறு முறையும் சொல்லுகிறேன்; நீ கட்டாயம் அவளைக் கலியாணம் செய்து கொள்ளத் தான் வேண்டும்; அவளுடைய சகோதரனை நான் அவளுக்காக இதனை உன்னிடம் விரும்புகிறேன்.

உல:—ஆ! கடவுளே! எல்லாம் எனக்குக் கனவுபோல் தோன்றுகிறது; இதைப்பற்றி என்னுடைய உறவினரிடம் கேட்டுக் கொள்ளவேண்டும்; என் வக்கீலிடமும் தெரிவித்து அவருடைய அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

அச்:—(சற்று கடுமையாக அவனை நோக்கி) நீ எவருடைய யோசனையும் கேட்கவேண்டியதில்லை; நீ சிறு குழந்தையல்ல; உன்னுடைய நடக்கைக்கு நீயே எஜமானனாயிருக்கின்றாய்; என்னை நீ ஏமாற்றுதல் முடியுமாவென்பது உனக்கே நன்றாய்த் தெரியும்; கிருஷ்ணப்பன் சண்டையில் ஒழிந்ததை நீ நேரில் பார்த்திருக்கிறாய்; உன்னால் கற்பழிக்கப்பட்ட அவளின் சகோதரனை நான் மறுபடியும் உன்னை வற்புறுத்துகிறேன்.

உல:—ஆனால் என் அன்பார்ந்த அச்சுதா!—,

அச்:—இவ்வாறு பேசுவதற்கு மற்றொரு சமயமுண்டு; இப்

பொழுது வேண்டாம்; என் தங்கையை மனப்பூர்வமாக நீ மணம் செய்து கொண்டபின் எவ்வளவு அன்பு நிறைந்த வார்த்தைகளையும் பேசலாம். கலியாணத்திற்கு உறுதி கூறு; உடனே என் வீட்டிற்குவா; உன்னைக் கண்டவுடன் ஜீவாம்பாளும் என் மனைவியும் உன்னை வரவேற்பார்கள்.

உல:—இல்லை; நான் அவ்வாறு சத்தியம் செய்து கொடுக்க முடியாது; உன்னோடு வரவு மாட்டேன். இப்போது வரமுடியாது.

அச்:—(மிக்க ஆத்திரங்கொண்டு) அய்யோ! கடவுளே! நீ பின்னால் மிகுந்த மனக்கவலைக் குள்ளாவாய்.

உல:—(நடுக்கத்துடன்) உனக்குக் கோபம் வேண்டாம்; ஆத்திரப் பட்டுப் பேசாதே; நீ ஒவ்வொன்றையும் அவசரப்பட்டு முடிக்கவேண்டு மென்கிறாய்; நீ எப்படியாவது என்னை வலிதில் சண்டைக்கும் இழுக்கப் பார்க்கிறாய்.

அச்:—"வலிதிற் சண்டையா? என்னையா கூறுகிறாய்; இருவரும் ஒரு கை பார்த்து விடுவோம்" என்று கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். அதைக் கண்டதும் உலகையனுக்கு முகம் வெளுத்து விட்டது. உடனே அவன்,

"ஓ! நீ இந்தக் கொடுங் காரியத்தைச் செய்ய மாட்டா யென்று நினைக்கிறேன்" என்று சொன்னான்.

அச்:—நீ என் சகோதரியின் விஷயத்தில் நான் சொல்லுகிறபடி கௌரவமாக நடந்து கொள்ளாவிடில் நான் உன்னை ஒரு நாயைச் சுட்டுக் கொல்வது போல் கொன்று விடுவேன்.

அந்தச் சமையத்தில் அவர்களிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. உடனே அக்கதவின் பக்கத்தில், "இல்லை;

அப்படி நடைபெறுது" என்ற ஒரு சத்தம் கிளம்பிற்று. அடுத்த நிமிஷம் உலகையனுடைய வேலைக்காரனுகிய சீனன் உள்ளே வந்து அச்சுதனை நோக்கி, "என்ன ஐயா! அந்தக் கொலைபாதகியையா மணம் புரிந்து கொள்ளச் சொல்லுகிறுய்" என்று அச்சுதனுடைய பாஷையிற் கேட்டான். இதைக் கேட்டதும் அச்சுதன் முகம் வெளுத்து ஆசனத்திற் சாய்ந்து விட்டான். மீண்டும் சீனன் அவன் சமீபத்தில் நெருங்கி, "ஆம்; அவள் கொலைபாதகி யென்று மறுபடியும் சொல்லுகிறேன்; உன் சகோதரி வஞ்சனையால் சுட்ட துப்பாக்கிக் குண்டே கிருஷ்ணப்பனைக் கொன்றது; இப்பொழுது நீ உடனே புறப்பட்டுப் போய்விடு; இல்லையேல், குலசேகரம்பிரபு வென்று நடித்த அக்கன்னிகையை எங்கள் வக்கீல் நியாய சபைக்குக் கொண்டு வந்து விடுவார்" என்றான்.

இவற்றை யெல்லாம் கேட்டவுடன் அச்சுதன் தன் எண்ணம் இனி நிறைவேருதென்பதைத் தெரிந்து கொண்டான். அதனல் அவன் மனச் சோர்வுற்று ஒன்றும் பேசாமல் அசைவற்றுச் சித்திப் பதுமை போன்றிருந்தான்.

அப்போது உலகையன் மனதில் திடீரென்று ஓர் உணர்ச்சி யுண்டாயிற்று; அதனல் அவன், "எனக்கிப்போது எல்லாம் விளங்கிவிட்டன—அந்தக் கொலை நடந்தபோது மூன்றுவதாக உண்டான வெடிச்சத்தமும்—அங்கே இல்லாத சார்ஜன் இருந்ததாக நான் நம்பும்படி நீ செய்ததும்—ஆ! அந்த இரவில் நடந்தது என்ன பயங்கரமான சம்பவம்!" என்று சொல்லி விட்டுப் புருவத்தை நெரித்துத் தள்ளாடிக்கொண்டு ஓர் ஆசனத்திற் சாய்ந்தான்.

அச்சுதன் மெலிந்த குரலுடன் உலகையனை நோக்கி, "இவ்விஷயங்களை நீ எங்கும் பிரஸ்தாபிக்காமலிருப்பாயா?" என்றான்.

உலகையன்:—(ஆசனத்தை விட்டெழுந்து) "கடவுள் சாக்ஷி யாக நான், என் மனதிலிருப்பதைச் சொல்லுகிறேன்; எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் வெளியிடவேண் டியதே; ஆம்; நான் அப்படிச் செய்யாவிட்டால் இவ் விஷயங்கள் ஒரு பேய்பிடித்து வருத்துவதுபோல் என் மனதை வாதனை செய்துகொண்டிருக்கும்" என்றான்.

அச்:—நண்பனே! நீ தயவு வை; என் மீதும் என் தங்கை மீதும் இரக்கம் காட்டு; இப்போது நான் அடைந்திருக் கும் தாழ்ந்த நிலைமையைக் காட்டினும் இழிவான நிலைமை இனி எப்போதும் அடையமாட்டேன்.

உல:—இப்போது எதையும் உறுதியாகச் சொல்ல என்னால் முடியாது. என் வக்கீலிடம் இவற்றை அவசியம் தெரிவிக்கவேண்டும்; காலையில் ஒன்றும் பாக்கியில்லா மல் இவை முழுவதும் என் லாயருக்குத் தெரிந்து விடும்; அவ்வாறு தெரிந்த பின்புதான் எனக்கு நல மேற்படும்.

அச்:—(மெல்லியகுரலாக) அப்படியானால் காலைவரையிலா வது இவற்றை வெளிப்படுத்துவதில்லை யென்று உறுதி கூறு.

உல:—இந்த உறுதியை வேண்டுமானால் நான் மனப் பூர்த்தியாக உனக்களிக்கிறேன்; உன்னையும் உன் சகோதரியையும் தூக்கு மரத்தின் சமீபத்திற் சேர்க்க எனக்கிஷ்ட மில்லையென்பது கடவுளுக்கே தெரியும்; உங்களுக்குத் தப்பித்துக்கொள்ள அவகாச மிருக்கிறது; நீங்கள் எங்கேனும் ஓடிமறைந்து கொள் ளுங்கள்.

இவற்றை யெல்லாம் கேட்டபின் அச்சுதன் மிகக் கலக்கமான மனத்துடன் அவ்வறையை விட்டு வெளியிற் சென்றான். அப்போது அவன் அடைந்திருந்த பரிபாதநிலை

மையை நாம் இன்னதென்று கூறமுடியாது. இதை வாசிக்கும் நண்பர்களே அதை யுணர்ந்து கொள்ளலாம்.

195-வது அத்தியாயம்

சீனனுக நடித்த இலட்சுமியால், உலகையனுக்கு உண்மை வெளிப்படல்—நீலாட்சியின் இரகசியம் ஜீவாம்பாளுக்கு வெளிப்படல்—அச்சுதனும் ஜீவாம்பாளும் நீலாட்சியும்—நீலாட்சியும் அச்சுதனும்—ஜீவாம்பாளின் மரணம்.

அச்சுதன் அவ்வாறு சென்றபோது, உலகையன் அவனை நோக்கியபடியே யிருந்தான். பின்னர் அவ்வறையின் கதவு மூடப்பட்டது. உலகையனுக்கு அங்கு நடந்த சமாசாரங்களைப்பற்றிக் குழப்பமாகவே யிருந்தது. அவனுடைய மனம் ஒருநிலையிலில்லை. முடிவில் அங்கேநின்ற சீனனை நோக்கினுன். (இந்தச் சீனன் யாதெனில், இலட்சுமியென்னும் பெண்ணே; அவளே ஆண்வேடந் தரித்துச் சீனன் என்னும் பெயர் கொண்டிருந்தாள்.) அவனை நோக்கியதும் உலகையன், "நீ என்னைப் பெரிய சங்கடத்தினின்றும் நீக்கிக் காப்பாற்றினுய்; இதற்காக நான் உனக்கு எவ்வளவோ நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்; நான் அவன் சொன்னதற்கு இணங்கி விடவேயிருந்தேன்," என்று கூறினுன்.

இல:—ஆம்; நீ இணங்கி விட்டிருப்பாய்—நீ இங்கே புறப்படும்போது நானும் உன்னுடன் வந்ததற்குக் காரணம் இப்போதுனக்குப் புலப்பட்டிருக்கும்; நான் இங்கே வீணுக வரவில்லை.

உல:—இலட்சுமி! நான் மறுபடியும் சொல்லுகிறேன்; ஜீவாம்பாள் மிகவும் கொலைபாதகி; அவள் மிகவும் தூர்த்த ஸ்திரீயென்று நினைத்திருந்தது சரியானதே.

இல:—சந்தேகமில்லாமல் அவள் அத்தகையவளே; கிருஷ்

ணப்பனைக் கொலை செய்த அந்த ஜீவாம்பாளுடைய செய்கையையும், அவளை நீ கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் உன்னைச்சுட்டுக் கொல்வதாகப் பயமுறுத்திய அச்சுதன் செய்கையையும் நீ நினைத் தால் உனக்கு மிக்க மனத்திடுக்கமுண்டாகும்; இத் தகைய கெட்ட சுபாவமுடையவர்களோடு நீ சம்பந்த மும் செய்து கொண்டிருந்தால் உனக்குண்டாகும் துன்பத்திற்கு அளவேயிராது. இந்த அச்சுதன் கிருஷ் ணப்பனையும் இவ்வாறே ஜீவாம்பாளைக் கலியாணஞ் செய்துகொள்ளும்படி வற்புறுத்தி அதற்கவன் இணங் காததற்காகவே மாணமடையச்செய்தான்; இப்போது உன்னையும் அவ்விஷயத்திற்காகவே கொன்று விடுவ தாக அவன் பயமுறுத்தினன்.

உல:—ஆம்; ஜீவாம்பாள் மிகவும் தூர்த்த ஸ்திரீயே; அவள் மிக்க அழகு வாய்ந்தவள்; இப்பேர்ப்பட்டவளிடத்தில் இத்துர்க்குணங்கள் பொருந்தியிருப்பதுதான் அதிசய மாயிருக்கிறது. இலட்சுமி! உற்ற சமயத்தில் நீ இப் போது வெளியிட்ட அந்தப் பயங்கா இரகசியம் உனக்கு எப்படித் தெரிந்தது?

இல:—அந்த ஜீவாம்பாள் குலசேகரம் பிரபுவாக வேடந் தரித்து உன்னுடன் வந்தபோது நான் அவளைக் கவ னித்துப் பார்த்திருக்கிறேன்; பின்னர் அச்சுதனும் அவளும் ஓரிடத்தில் இரகசியமாகப் பேசிக்கொண் டிருந்தபோது நான் மறைந்து நின்று அப்பேச்சுக் களைக் கவனித்ததன் மூலம் அவளே குலசேகரம் பிரபு வாக வந்தவளென்பதையும் மற்ற இரகசியங்களையும் தெரிந்துகொண்டேன்; கிருஷ்ணப்பன் கொல்லப் பட்ட அன்றிரவு அவள் இரண்டு துப்பாக்கிகளைக் கொண்டு வரும்படியும் ஒன்றைத் தன்னிடம் கொடு

த்து மற்றொன்றை அவள் வைத்துக்கொள்ளும்படி யும் தன்னுடைய துப்பாக்கிக் குறி தவறிவிட்டால் அவள் கிருஷ்ணப்பனைச் சுட்டுவிடும்படிக்கும் அச்சுதனே ஜீவாம்பாளுக்குச் சொன்னான். அந்தப்படியே அவள் கிருஷ்ணப்பனைச் சுட்டுக்கொன்றாள்.

உல:—ஐயோ! கடவுளே! இஃதென்ன கொடுஞ்செய்கை! நெஞ்சு திடுக்கிடத் தக்க விஷயம்! ஆம்; ஜீவாம்பாளே தான் கிருஷ்ணப்பனைக்கொன்றிருக்கவேண்டும்; அவள மிகக் கெட்ட சுபாவமுடையவள்; எதற்கும் துணிந்த வள்; அப்படியில்லாவிட்டால் அத்தகைய அழகும் இளமையுமுள்ள கன்னிகை சண்டை நடந்த அந்தப் பயங்கரமான விடத்திற்கு வரவேமாட்டாள். ஆனால், இலட்சுமி! உனக்கந்த இரகசியம் தெரிந்த போதே நீ ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை?

இல:—(சிறிதுநேரம் யோசித்துக்கொண்டிருந்து) என்னுடைய உத்தேசம் வேறு; நான் காரியங்களெல்லாம் நடக்கிறபடி நடக்கவிட்டு முடிவாக உனக்கு ஆபத்து வருகிறதாயிருந்தால் அந்தச் சமயத்தில் ஜாக்கிரதையாய் உன்னை அவ்வாபத்தினின்றும் தப்புவித்துக் காப்பாற்றவேண்டுமென்று நினைத்திருந்தேன்; அதன் படியே இதுவரை ஒன்றும் சொல்லாதிருந்து இப்போது உனக்கு நேரவிருந்த ஆபத்தை நீக்கி இரகசியத்தை வெளியிட்டேன்; எது எப்படியிருந்தாலும் உனக்குச் சமயத்தில் நான் உதவி செய்வதொன்று தானே தேவை; மற்றவற்றைப்பற்றி உனக்கென்ன அவசியம்; அதனாலுனக்கென்ன தீங்கு?

உல:—இலட்சுமி! தீங்கென்று நான் சொல்லவில்லை—

இல:—நீ ஒரு தூர்த்த ஸ்திரீயை—பெரிய கொலைகாரியை மணம் செய்து கொள்ளும் பெரிய துன்பத்தினின்

றும் காப்பாற்றப்பட்டாய்; இத்தகைய விஷயத்தி னின்றும் நீக்கி நான் உன்னைக் காப்பாற்றினதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம்; உனக்கும் அந்தப் போக்கிரிப்பயலாகிய அச்சுதனுக்கும் ஆகாரம் பறி மாறப்பட்டதிலிருந்து உங்களிருவர்க்குள்ளும் நடந்த சம்பாஷணை முழுவதையும் கேட்டேன்; நீங்கள் வக் கீல் வீட்டிற்குப் போய் வந்ததைப்பற்றிப் பேசிக் கொண்டதையும் கவனித்தேன்; வக்கீல் குலசேகரம் பிரபுவை ஆஜர்ப்படுத்தவேண்டுமென்று சொன்னதாக நீங்கள் பேசிக் கொண்டபோது ஜீவாம்பாளே குல சேகரம் பிரபுவென்பது எனக்கு நன்றாக விளங்கிவிட் டது. அதனாலேயே அவள் விஷயத்தை ஐயமறச் சொல்லி அச்சுதன் மனதைத் திடுக்கிடச் செய்தேன்.

உல:—"இலட்சுமி! நீ எனக்குச்செய்தது பெரிய உபகாரம்; இதை நான் எப்போதும் மறக்கமாட்டேன்." என்று சொன்னான்.

இனி, இந்த இலட்சுமி, சினனாக வேடந்தரித்து எப் படி உலகையனிடம் வந்து சேர்ந்தாளென்பதைக் கவனிப் போம்:—

கிருஷ்ணப்பனுடைய கொலை நடந்த மறுதினம் அதற் காகக் கைதியாக்கப்பட்டிருந்த உலகையன் ஜாமீன்பேரில் விடுதலை யடைந்து தனக்கு இந்திரபுரியிலிருப்பது சௌக் கியமாகத் தோற்றியபடியால் அங்கேயே இருந்தான். அவ னுடைய சிறிய தந்தை அவன் அங்கிருந்தால் தூர்த்த வாலிபர்களுடைய சேர்க்கையிலும், வாலிப விளையாட்டு விஷயங்களிலும் இறங்கிக் கெட்டுவிடுவானென்று நினைத்து அவனை வெளி நாட்டிற் கழைத்துச் சென்றான். அப் போது இலட்சுமி உலகையனோடு அந்தரங்க உறவுள்ள வளாயிருந்தபடியால் அவனுடைய சிறிய தந்தை தன்னை

அறியாதிருக்கும் பொருட்டு ஆண்வேடந்தரித்து, உலகையனிடம் தன்னையும் வெளிநாட்டிற் கழைத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அவன் அவ்வாறே அழைத்துச் சென்றான். உலகைனுடைய சிறிய தந்தை அவளை அவனுடைய வேலைக்காரனென்று நினைத்துக் கொண்டான். அப்போது இலட்சுமி சீனன் என்று பெயர் வைத்துக்கொண்டாள். மூவருக்கும் பிரயாணச் சீட்டு வாங்கும்போது இலட்சுமிக்குச் சீனன் என்னும் பெயராலேயே பிரயாணச்சீட்டு வாங்கப்பட்டது. இவர்கள் இவ்வாறு புறப்பட்டுப்போய் அன்னிய நாட்டில் பலவிடங்களில் சஞ்சரித்தார்கள். அப்போது பாலி என்னுமிடத்தில் உலகையனுடைய சிறிய தந்தை இறந்து போனார். அவரை உலகையன் அடக்கம் செய்துவிட்டு துக்க உடை அணிந்துகொண்டு வெளிநாட்டுச் சஞ்சாரம் தனக்குச் சௌக்கியமாயிருந்தபடியால், தன் கேஸ் விசாரணை காலத்தில் இந்திரபுரிக்குச் செல்லலாமென்று அன்னிய தேசங்களிலேயே சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான். இப்போது கேஸ் தொடங்குங்காலம் சமீபத்தில் வந்துவிட்ட படியால் இந்திரபுரிக்கு வந்து சேர்ந்தான். மாறுவேடந் தரித்திருந்த இலக்குமி அன்னிய நாடு போயிறங்கியவுடனாவது, உலகையனுடைய சிறிய தந்தையிறந்தவுடனாவது, மீண்டும் இந்திரபுரிக்கு வந்த பின்பாவது ஏன் தன்னுடைய மாறுவேடத்தை மாற்றிக்கொள்ளவில்லையென்றால், அதற்குச் சில காரணங்களுண்டு:—அவளுக்குச் சீனன் என்னும் பெயர் கொடுத்து அவன் உலகையனுடைய வேலைக்காரனென்று பிரயாணச்சீட்டு வாங்கப்பட்டிருந்தமையால் அவள் அன்னிய நாட்டிற் போயிறங்கியவுடன் அப்பெயரையும் உருவத்தையும் மாற்றினால் பிரயாணச் சீட்டுச் சம்பந்தமாகச் சில சந்தேகங்களுண்டாகும்;

உலகையனுடைய சிறிய தந்தை யிறந்தவுடன் மாற்றினல், உலகையன், தன் சிறிய தந்தை யிறந்தவுடனே நிர்ப்பய மாய் ஒரு வாலிபமாதைச் சேர்த்துக்கொண்டான் என்னும் அபவாதம் அவனுக்குண்டாகும்; இவற்றினுலேயே அவள் அச்சமயங்களில் தன் மாறுவேடத்தை மாற்றவில்லை. இந்திரபுரிக்கு வந்தபின் மேற்கூறியபடி மாறுவேடத்துட னிருந்தே உலகையனுக்கு வரும் அபாயங்களைத் தடுத்துச் சில இரகசியங்களை வெளிப்படுத்த உத்தேசித்திருந்தாள். அதனுலேயே அங்கும் மாற்றவில்லை.

உலகையனையும், இலட்சுமியையும் இம்மட்டோடு விட்டு விட்டு இனி நீலாட்சி தன் மாளிகையில் என்ன செய்கிருளென்பதைக் கவனிப்போம்: அவள் மருந்துக் கடையி லிருந்து திரும்பி வந்தபொழுது இரவு எட்டுமணியிருக்கும். வந்ததும் அவள் துரிதமாய்ப் படிக்கட்டுகளின் வழியாக ஏறித் தன் அறையிற்போய்ச் சேர்ந்தாள். அங்குப் போய்ச் சேர்ந்தவுடன் தான் வாங்கிவந்த இரண்டு மூன்று புட்டி களிலுள்ள மருந்தை ஒரே புட்டியில் ஊற்றினுள். அவள் அவ்வாறு செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று அவ ளுக்குப் பின்பக்கதில் மனிதர் காலடிச் சத்தம் கேட்டது. உடனே அவள் திரும்பிப் பார்த்தாள். அப்போது ஜீவாம் பாள் வருவதைக்கண்டாள். நீலாட்சி தன் அஜாக்கிரதை யினுல் கதவை மூடித் தாளிடாமலிருந்து விட்டாள். அவ் வாறு செய்த தன் மதியீனத்தைப்பற்றித் தன்னைத்தானே கோபித்து ஆத்திரப்பட்டாள். அவள் கடைக்குப்போய் வந்த உடையுடனேயே அப்போதிருந்தாள். அவள் மேற் கண்டவாறு இரண்டு மூன்று புட்டிகளிலிருந்த மருந்தை ஒரு புட்டியில் ஊற்றும்போது அந்த மருந்து இருந்த இரண்டு மூன்று புட்டிகளின் மேலும் அபினிச்சத்து என்று பெயர் அச்சடிக்கப்பட்ட துண்டு ஒட்டப்பட்டிருந்தது.

நீலாட்சி ஜீவாம்பாளைப் பார்த்தவுடன், "ஆ! ஜீவாம்பாள்! நீயா! என்னைத் திடுக்கிடும்படிசெய்து விட்டாய்" என்று கைக்குட்டையால் அந்த மருந்துப் புட்டிகளை மறைத்துக் கொண்டாள்.

ஜீவா:—நான் உன் காரியத்திற்கு இடையூறாய் வந்ததைப் பற்றி மிக விசனிக்கிறேன்; நான் உள்ளே வருவதற்கு முன் கதவைத் தட்டவேண்டுமென்று யோசிக்கவில்லை; ஆ! இந்த விநோத உடையுடன் நீ எங்குச் சென்றிருந்தாய்?

நீலா:—எங்கே சென்றிருந்தேனென்று நீ கேட்கிறாய்? அதைப்பற்றி இப்போது அவசிய மொன்றுமில்லை; நாளையாவது அதற் கடுத்த நாளாவது தெரிவிக்கிறேன்; ஆனால், என் விஷயங்களைப் பற்றி நீ ஒரு வார்த்தை கூட வெளியில் விடமாட்டா யல்லவா? நீ நல்ல பெண்.

ஜீவா:—நீலாட்சி! நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்! நீ மறைக்க எத்தனித்த அந்தப் புட்டிகளை நான் பார்த்து விட்டேன். தயவு செய்து உண்மையைக் கூறிவிடு.

நீலா:—ஜீவாம்பாள்! நீ இப்போது மூடப் பெண்மாதிரி நடந்து கொள்ளாதே; பயித்தியக்காரத்தனமான எண்ணங்களை விட்டுவிடு; நான் பல்வலியால் அவஸ்தைப் படுகிறேனென்பது உனக்குத் தெரியும்.—

ஜீவா:—உனக்கா பல்வலி! அப்படி யொன்றுமில்லையே.

நீலா:—நான் அப்படிச் சொன்ன கருத்தென்னவெனில் இரவெல்லாம் சரியானபடி தூங்கவில்லை.

ஜீவா:—என்ன நீ சொல்வது? உன்னுடைய குழப்பமான வார்த்தைகள் என்னைப் பிரமிக்கச் செய்கின்றன.

நீலா:—(மிக்க துடுக்காக) மூடப்பெண்ணே! இனி இவ்வித மான கேள்விகளைக் கேட்காதே; நான் வித்தியாசம்

கூறுவதாக நினைக்கவேண்டாம்; நான் விஷத்தை உட்கொள்ளப்போகிறதில்லை. இது உனக்குமில்லை, உன் தமையனுக்குமில்லை. ஜீவாம்பாள்! உன்னிடத்தில் சில இரகசியங்கள் இருப்பதைப்போலவே என்னிடத்திலு மிருக்கும்; உன்னுடைய இரகசியங்களை நான் எப்படி வெளியில் விடாமலிருக்கின்றேனோ அப்படியே நீ என்னுடைய இரகசியங்களையும் வெளியிடாதிருக்க வேண்டும்.

இவற்றைக்கேட்டதும் ஜீவாம்பாள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவள் மனக்குழப்பமும் பீதியுமுடையவளாகிக் கொஞ்சநேரத்தில் வெளியிற் சென்றுவிட்டாள். அவள் சென்றபின், நீலாட்சி, "நம் காரியங்களெல்லாம் ஒழுங்காகவும் இரகசியமாகவும் திருப்தியாகவும் நிறைவேறி வருகின்றன என்று நாம் நினைத்திருக்கும்போது திடீரென இத்தகைய மனக்கலக்கமான விஷயம் நிகழ்ந்துவிட்டதே" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். அவ்வாறு சொல்லிக்கொண்டே ஜீவாம்பாள்மீது ஆத்திரமுடையவளாய்த் தான் வைத்திருந்த மருந்துப் புட்டிகளை மேஜை அறைக்குள் அவசரமாக வைத்துவிட்டு மாலை நேரத்திற்குரிய உடையணிந்து கொண்டாள்.

இதற்கிடையில் ஜீவாம்பாள் படிக்கட்டுகளின் வழியாய்க் கீழிறங்கித் தாழ்வாரத்திற் சேர்ந்து மனவேதனையோடு கையைப் பிசைந்துகொண்டு ஒரு சோபாவிற் சாய்ந்து, "ஆ! கடவுளே! நீலாட்சியின் எண்ணமெதுவோ தெரியவில்லையே! நான் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு காரியத்திலும் மனக்குழப்பமும் பீதியுமுள்ள சம்பவங்களே நிகழ்கின்றன; நாம் இதை அச்சுதனிடம் கூறலாமா? இல்லை இல்லை அது கூடாது—" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். அப்போது அங்கே மனிதர் வரும் கால

டிச்சத்தம்கேட்டது. அதைக் கேட்டதும், "யார் இங்கே வருகிறது" என்று சத்தம் வரும்வழியை நோக்கினள். உடனே அச்சுதன் அங்கே வந்தான். அவன் முகம் வெளுத்துத் தலையிறங்கினவனுயிருந்தான். அவனுடைய தோற்றத்தைக் கண்டதும் ஜீவாம்பாள் திடுக்கிட்டாள். உடனே அவனை நோக்கிப் பதற்றத்துடன் 'என்ன நடந்தது?' என்று வினவினள்.

அச்:—நம்முடைய உத்தேசங்கள் கைகூடவில்லை; எல்லாம் விரோதமாகவே முடிந்துவிட்டன; இனிநாம் இங்கிருந்தால் ஆபத்திற் சிக்கிக்கொள்வோம்; நம் இரகசியங்கள் வெளியாய் விட்டன; நாம் எங்கேனும் ஓடிவிட வேண்டியதே.

இதைக்கேட்டதும் ஜீவாம்பாள் 'ஐயோ! கடவுளே!' என்று திகிலுடன் ஓர் ஆசனத்திற் சாய்ந்தாள். அதன் மேலும் அச்சுதன், "ஆம்! நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம்; நமக்கு நன்மை யென்பதில்லை; எதையும், செய்ய நமக்கு அனுகூலமில்லை; உலகையன் உன்னை ஏற்றுக்கொள்ளமாட்டான்; அன்றிரவு மூன்றுவது வெடி தீர்த்தது நீதானென்பதை அவன் கண்டு பிடித்துவிட்டான். என்னையும் அக்குற்றத்திற் சம்பந்தப் படுத்தியிருக்கிறுன்; நாளைக்காலை அவன் எல்லாவற்றையும் இலாயரிடம் சொல்லிவிடுவான்; போலீஸ்காரர்கள் நம்மைத் தேடிப்பிடிக்க வந்து விடுவார்கள்; துர்ப்பாக்கியமுள்ளபெண்ணே! நம்மை இவ்வளவு தூரம் கொண்டு வந்துவிட்டது நீதான்" என்று அவள் தோள்மீது கையை வைத்தழுத்தி ஆத்திரத்தோடு கூறினன்.

பரிதாபமான அம்மாது அவனை நோக்கிக் கைகூப்பிக்கொண்டு "ஓ அண்ணு! என்னை மன்னி! மன்னி!!" என்று கூறினள். அப்போது அச்சுதன் மிகுந்த கோபத்தோடு

'மன்னிப்பதா! சீ அப்பாற்போ' என்று அவளைக் காலால், ஓர் உதை உதைத்துத் தள்ளிவிட்டு மேலும் அவளைநோக்கி, "உனக்காக நான் மீண்டும் இங்கே வாராதபடி ஓடிப்போக வேண்டும்; நீ உன் இஷ்டம்போல் நடக்கும் தூர்த்தப் பெண்ணாகிவிட்டாய்; உன்னை நான் காலால் தேய்த்து விடுவேன்" என்றான். அப்போது நீலாட்சி, "ஆ கடவுளே! இதென்ன இது" என்றுகூவிக்கொண்டு அங்கே விரைந்தோடி வந்தாள். அச்சுதன் 'என்னவா' என்று மேலொன்றும் சொல்லாமல் அங்குமிங்கும் சிறிதுநேரம் உலாவிக் கொண்டிருந்துவிட்டுப் பின்னர், "என்புத்தி ஒரு நிதானத்தி லில்லை; நான் தற்கொலை செய்துகொள்ளும் நிலைமையிலிருக்கிறேன்" என்று சொன்னான்.

அதைக்கேட்டதும் நீலாட்சி, "ஐயோ! என்ன நடந்தது! என்ன நடந்தது!! கூறும்" என்று பதற்றத்தோடு அவனிடம் கேட்டாள். ஜீவாம்பாள் இதுதான் தருணம் என்று அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டாள்.

அப்போது அச்சுதன், தன் மனைவியை நோக்கி, "நீலாட்சி! நீ அந்த இரகசியத்தைப் பின்னர்த் தெரிந்து கொள்ளலாம்; இப்போது நீ என்னுடன் வெளித்தேசத்திற்குப் புறப்படவேண்டும்; பிரயாணச்செலவிற்குப்போதிய பணம் உன்னிடத்திற்றானிருக்கிறது; என்னிடம் அதிக திரவியம் இல்லை; என் தந்தை என்னை அந்நிலையில் வைத்துவிட்டார்" என்றான். அதற்கு நீலாட்சி, "பணத்தைப்பற்றி ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லை; நீர் எதற்காக வெளிநாட்டிற்குச் செல்லவேண்டுமென்கிறீர்? அச்சண்டையைப் பற்றிய இரகசியம் ஏதாவது வெளி வந்திருக்கிறதா? உலகையனைப்பற்றிய இரகசியம் ஏதேனுமுண்டா? ஜீவாம்பாள் ஏன் உம் காலடியிலிருந்தாள்? நீர் ஏன் அவளை வைதுகொண்டிருந்தீர்?" என்று வினவினாள்.

அதன்மேல் அச்சுதன் அவளைநோக்கி, "நீலாட்சி! நீ அதனை அறிய அதிக ஆவல் கொள்வதால் நான் அதைச் சொல்லிவிடுகிறேன்; இன்னொருவர் மூலம் நீ தெரிந்து கொள்வதைக் காட்டினும் என்னால் தெரிந்து கொள்வது நல்லது; அந்த அனர்த்தமான கிருஷ்ணப்பனுடைய சண்டை நடந்ததே அன்று அவன் என்னால் கொல்லப்பட வில்லை. வஞ்சத்தால் வேறொருவரால் ஒருகுண்டு சுடப் பட்டது; அது சரியான வஞ்சம்; அதனாலேயே கிருஷ்ணப் பன் இறந்தான். நியாயஸ்தர்கள் அதை அநியாயச் செய லென்றே கூறுவார்கள். அந்த வெடி தீர்த்தவள் ஜீவாம் பாளே" என்று சொன்னான். உடனே நீலாட்சிக்கு அவள் அப்படிச் செய்திருப்பாளென்பது புலப்பட்டுவிட்டது. கிருஷ்ணப்பனுடைய சண்டைக்குப் பிறகும், ஜீவாம்பாள் உலகையனுடைய சம்பந்தம் வைத்துக் கருவுற்றதற்கு முன்னும் இருந்த அவளுடைய நடக்கையின் மாறுதல்களை நினைத்துப் பார்த்து அவள் அத்தகைய குணமுடையவள் தானென்பதைத் தெரிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்து கொண்டபின் "ஆம்; அவளுடைய நடக்கைகள் அப் படிப்பட்டவள்தானென்பதைக் காட்டுகின்றன" என்றாள்.

அதன்மேல் அச்சுதன், "ஆம்! ஆம்!! நான் சொல் வது உண்மை; உலகையன் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டான்; நாம் ஜீவாம்பாளை உலகையனுக்கு மணஞ் செய் வதற்கு எடுத்துக்கொண்ட சூழ்ச்சி வெளியாகிவிட்டது; நான் இந்தக்ஷணமே ஓடி மறைந்துவிடவேண்டும்; ஜீவாம் பாளும் என்னுடனே வந்துவிடவேண்டும்; என்னுடைய நாசத்திற்கு அவளே மூலகாரணமாயிருந்தாலும் நான் அவளை வெறுத்து விட்டுவிடமுடியவில்லை. ஆனால், நீ என்ன செய்யப்போகிறாய்? இதற்குப்பதில் சொல்லுமுன் உன்

மனதில் ஒரு விஷயத்தைப்பற்றி ஞாபகம் வைத்துக்கொள்; உன்னுடைய நெருங்கிய சுற்றத்தானாகிய தம்புச்சாமிப் பிள்ளையின் இரகசியத்தை நான் யாரிடமும் வெளியிட வில்லை; இதே போல நீயும் எங்கள் விஷயத்தில் நடந்து கொள்ளவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்து எனக்குப் பதில் சொல்" என்றான்.

நீலா:—நான் அதைத் தெரிந்துகொண்டேன்; அதற்குத் தக்கபடி நடந்து கொள்வேன்; உம் அதிஷ்டமும் என் அதிஷ்டமும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன; உம்மால் நான் பட்டத்தையும் அந்தஸ்தையும் அடைய விரும்பினேன்; என்றால் நீர் சௌக்கியத்தை யடைய விரும்பினீர்; அவற்றாலேயே ஒருவர்க்கொருவர் செய்யவேண்டியதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். உமக்கும் எனக்கும் ஆதியில் ஏற்பட்ட சம்பந்தத்தைப்பற்றி இப்போது பிரஸ்தாபித்தால் பரிகாசத்திற்கிடமாகும்.

அச்சுதன்:—இந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் தன்னுடன் வருவாள் என்று நினைத்து அவளை நோக்கி, "அப்படியானால் நீ இப்பொழுதே என்னுடன் வருவாயல்லா? வந்தால் நீயே எல்லாவற்றிற்கும் எஜமானியாயிருக்கலாம்" என்று சொன்னான்.

நீலா:—நான் உம்மோடு இப்பொழுதே சேர்ந்து வர முடியாது; பின்னால் வந்து சேருவேன்; மூன்று நான்கு தினங்களுக்குள்:—

அச்:—நீ அவ்வளவு சொன்னதுபோதும்; அதற்குமேல் நான் வற்புறுத்துவது கூடாது. ஆ! ஜீவாம்பாள் எங்கே யிருக்கிறாள்? நீ அவளிடம் சென்று புறப்படுவதற்கு நாழிகையாகி விட்டதென்று சொல்; நானும் அவளும் இரகசியமாக இவ்விடத்தை விட்டுப் போய்

விடவேண்டும்; ஒரு பிரயாணப்பையும், அவசியமான சில சாமான்களும் நாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். நீ ஜீவாம்பாளை உடனே அழைத்துவா.

இவற்றைக்கேட்டதும் நீலாட்சி அத்தாழ்வாரத்திலிருந்து தன் மைத்துனி யிருக்கும் அறைக்குச் சென்றாள். அப்போது ஜீவாம்பாள் அங்கில்லை. நீலாட்சி மற்றும் அங்கிருந்த மூன்று நான்கு அறைகளிலும் அவளைத் தேடிப் பார்த்தாள். அவள் எங்கும் காணப்படவில்லை. பிறகு ஒரு தீபத்தை யேற்றிக்கொண்டு தன் அறைக்குச் சென்றாள். சென்றதும் ஆ! என்று பயங்கரமான சப்தமிட்டாள். ஏனெனில் அங்கே ஜீவாம்பாள் ஒரு விரிப்பின்மேல் செத்தபிரேதம்போற்கிடந்தாள். நீலாட்சிக்கு வெகு சீக்கிரம் ஜீவாம்பாளைப்பற்றிய உண்மை புலப்பட்டு விட்டது. அவள் அவளைப் புரட்டி ஆராய்ந்து பார்த்ததில் தான் வைத்திருந்த அபினிச்சத்தை விழுங்கி விட்டாளென்று தெரிந்தது. அவள் அதை மேஜை அறைக்குள் வைத்து அதைப்பூட்டும்போது அவசரத்தில் சரியாகப் பூட்டாமல் வந்துவிட்டதால் ஜீவாம்பாளுக்கு அதை யெடுத்துக்கொள்ள வசதியேற்பட்டது.

நீலாட்சி அவ்வாறு சத்தமிட்டதை ஒருவரும் கேட்கவில்லை. அதனால் ஜீவாம்பாள் விஷயம் அவளுக்கு மட்டுமே தெரிந்ததாயிருந்தது. அப்போது அவள் விஷயத்தைப் பற்றி நீலாட்சி முதலில் பதறிச் சத்தமிட்டாலும் பின்னால் அதனை அடக்கிக்கொண்டாள். ஏனெனில் அவளைப் பார்த்ததும் தானே அதற்குக் காரணமாயிருந்திருக்கக்கூடுமென்று யாரும் சந்தேகிப்பார்களென்றும் அதற்கேதேனும் சூழ்ச்சிசெய்யவேண்டுமென்றும் அவளுக்கு ஒரு யோசனை உதித்தது. ஆதலின், பதற்றத்தை யடக்கிக்கொண்டு சிறிது தைரியமடைந்து, தன் மேஜை அறையில், முன்

அபினிசத்து வைக்கப்பட்டு ஒரே புட்டியில் ஊற்றி விட்டுக் காலியாயிருந்த புட்டிகளை அங்கு எரிந்துகொண்டிருந்த நெகிடித் தீயில் போட்டு எரித்துவிட்டு, அந்த ஒரு புட்டியில் ஜீவாம்பாளால் அருந்தப்பட்டதுபோக மீதியிருந்த மருந்தில் கொஞ்சம் மாத்திரம் வைத்துவிட்டு மீதி மருந்தையெல்லாம் அந்நெருப்பிலேயே ஊற்றி விட்டு அப்புட்டியை அங்கேயே வைத்துவிட்டு வெளியிலோடிவந்து மிக்க பீதியடைந்தவள்போல் கதறினாள். அந்தச் சப்தத்தைக்கேட்டு அச்சுதன் அங்கே ஓடிவந்தான். அவன் வந்து நீலாட்சியிடம் ஒருவார்த்தை கேட்பதற்குள்ளாகவே அவள் போட்ட பயங்காக்கூச்சலால் அவ்வீட்டிலுள்ள எல்லோரும் அங்கே வந்து கும்பலாகக் கூடிவிட்டார்கள்.

அப்போது நீலாட்சி "ஜீவாம்பாள் எதையோ சாப்பிட்டு விட்டு இறந்து விட்டதாகத் தெரிகிறது. அவள் சாப்பிட்டது இன்னதென்று தெரியவில்லை. அது விஷமாகவே யிருக்கவேண்டும்; அந்த அறையில் வீசுகிற வாசனையால் அது அபினிச் சத்தா யிருக்கலாமென்று தெரிகிறது" என்று சொன்னாள்.

அங்கே கூடியிருந்தவர்களுக்குள் மிகுந்த குழப்பமாயிருந்தது. உடனே ஒரு டாக்டர் வாவழைக்கப்பட்டார். அச்சுதன் தாய் தந்தையராகிய திரவிய நாதம் பிரபுவுக்கும் அவர்மனைவிக்கும் இச்சமாசாரம் அறிவிக்கப்பட்டது. டாக்டர் பார்த்து விட்டு ஜீவாம்பாளுக்கு உயிர் நீங்கி விட்டதென்று சொல்லிவிட்டார். அந்தப் புட்டியிலிருந்த இரண்டு மூன்று துளி மருந்தைப் பார்த்து அது இன்ன விதமான குணமுடைய தென்பதைத் தெரிந்து கொண்டார். அதனால் மேலும் ஒரு பரீக்ஷையும் செய்ய முயலவில்லை. திரவிய நாதம்பிரபுவும், அவர் மனைவியும் அவசரமாக அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன் அச்சுதன்

வெளிநாடு செல்வதற்கு மறைந்தோடிவிட்டான். திரவிய நாதம் பிரபுவும், அவர் மனைவியும் அங்கே வந்ததும் ஜீவாம் பாள் மேல் விழுந்து புலம்பி நீலாட்சி சொன்ன விஷயங் களைக் கேட்டு ஆருத்துயரத்தில் அழுந்தினார்கள்.

196-வது அத்தியாயம்

உலகையன் வழக்கு முடிவு—தம்புசாமிபிள்ளையின் தற்கொலை—நீலாட்சி ஏமாற்ற மடைதல்—திரவியநாதம் பிரபுவின் மனைவியின் மரணம்.

மறுநாட்காலையில் உலகையன் தன் வழக்கு விசார ணைக்காகத் தானே நியாயாதிபதி முன் ஆஜராகி விட்டான். அச்சுதன் ஆஜராகவேண்டியதும் மிக முக்கியமா யிருந்தும் அவன் அங்குத் தலைக்காட்டவேயில்லை. சில ருசுக் களால் கிருஷ்ணப்பனுடைய கொலையில் உலகையன் சம் பந்தப்பட்டா னென்ற குற்றம் அவன் மீது சாட்டப்பட் டது. வக்கீல் சொன்ன யோசனைப்படி உலகையன் அக் குற்றச் சாட்டை யொப்புக் கொண்டான்.

அதன்மேல் அவனுடைய வக்கீல் எழுந்து பேசத் தொடங்கி, "நான் இப்போது கூறப்போகும் விஷயம் உல கையனுடைய வாயினாலேயே எனக்கு வெளிப்படுத்தப் பட்டது. எனினும அவன் சொல்லியதில் ஒன்றும் பொய் யில்லை; உண்மையைக் கூறவேண்டியது தன்னுடைய கடமை யென்றுநினைத்து இந்தக் கொலைக் குற்றத்திற்கும் தனக்கு முள்ள சம்பந்தத்தை உள்ளபடியே கூறியிருக்கிறான்; அவன் கூறியபடியே நான் கூறுகிறேன்; இதனால் கபடற்ற அவ னுக்குச் சாதகங் கிடைக்குமென்றே நினைக்கிறேன்; இவனோ மிகவும் உலக அனுபவ மில்லாத பாலியன்; மிகுந்த உலக அனுபவமும் தந்திர சாமார்த்தியமு முடையவர்களால்

ஏமாற்றி இதில் சிக்கவைக்கப்பட்டிருக்கிறன்; அப்படி இவனை ஏமாற்றியவன், இப்பொழுது ஆஜராக வேண்டியிருந்தும், வராமல் மறைந்திருக்கிற முக்கிய குற்றவாளியாகிய அச்சுதனே. இது தவிர கொலையுண்ட கிருஷ்ணப்பன் விஷயத்தைப் பற்றியும் கொஞ்சம் எடுத்துப் பேசவேண்டியிருக்கிறது. இறந்தவனைப்பற்றி இழிவு பேசுதல் தகுதியல்லவெனினும் அவனுடைய நடக்கைகள் இவ்வழக்கிற்கு அவசியம் எடுத்துச் சொல்லக் கூடியவைகளாயிருப்பதால் அவற்றை எடுத்துச் சொல்லுகிறேன். இக் குற்றச்சாட்டில் முக்கியமாகச் சம்பந்தப்பட்டவனுகிய அச்சுதன் சகோதரியாகிய ஜீவாம்பாளை அந்தக் கிருஷ்ணப்பன் நிச்சயமாகக் கற்பழித்திருக்கிறன். அது காரணமாகவே அச்சண்டை கிருஷ்ணப்பனுக்கும், அச்சுதனுக்கும் விளைந்திருக்கிறது. கிருஷ்ணப்பனுக்கு உலகையனுடன் பழக்கமிருந்தபடியால் அவன் இவனை அச்சமயம் தனக்கு உதவிக்கு வரும்படி வேண்டியிருக்கிறன். உலகையன் அதற்கிசைந்தான். கிருஷ்ணப்பன் வேண்டியதும், உலகையன் அதற்கிணங்கியதும் வெகு சீக்கிரமாகவே நிறைவேறி விட்டன. உலகையன், தன்னுடைய சிநேகிதர்களின் கோரிக்கையைத் தடுக்காத இயல்புடையவன்; அதனுலேயே அவ்வளவு சீக்கிரம் அவ்விஷயத்திற் கிணங்கினுன். அச்சுதனும் தனக்குதவியாக ஒரு ஆசாமியை அழைத்து வந்தான்; அவன் குலசேகரன் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஆனுல் உண்மையில் குலசேகாம் பிரபுவல்ல. அச்சுதன் சகோதரியாகிய ஜீவாம்பாளே; அவள் குலசேகாம் பிரபுவைப்போல மாறுவேடமணிந்து வந்தாள். இங்குள்ள கனவான்களே! நான் முடிவாக நடந்த விஷயத்தைச் சத்தியமாகக் கூறுகிறேன்; கிருஷ்ணப்பனைச் சுட்டுக் கொன்றவள் குலசேகரனுகவந்த ஜீவாம்பாளே” என்று சொன்னுர்.

இவற்றைக்கேட்டதும் அங்குக் கூடியிருந்தவர்களுக்குள் 'ஓ! அப்படியா?' என்று ஒருவிதமானமனக்கிளர்ச்சியும் இரைச்சலு முண்டாயின. அவ்வாறுண்டாகிய பின் லாயர் மறுபடியும் பேசத்தொடங்கி, "இன்னும் இதைப்பற்றி விஸ்தரித்துச் சொல்ல வேண்டியது அவசியமில்லை. இதற்குப் போதிய சாக்ஷிய மொன்றிருக்கிறது; அந்தக் கொலைபாதகியான ஜீவாம்பாள் நேற்று மாலையே விஷத்தையுண்டு மடிந்து விட்டாளென்னும் சமாசாரம் இன்று காலைப் பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. தன்னுடைய கொலைக் குற்றம் வெளியாகப் போகிறதென்ற அச்சத்தாலேயே அவள் தற்கொலை செய்து கொண்டா ளென்பது எல்லோருக்கும் நிச்சயமாகவிளங்கும். இன்னும் அச்சுதனே சண்டையில் கிருஷ்ணப்பனைச் சுடும்படி ஜீவாம்பாளுக்கு உபாயஞ் சொன்னவன்; அவன் ஏவுதலினாலேயே அக் கொலை நிகழ்ந்தது. அதனாற்றான் அவனும் அவளிறந்த பின் மறைந்தோடி விட்டான். அந்த அச்சுதன் இங்கே ஆஜராக்கப் பட்டால் இந்த உலகையன் அவனுக்கு நேரிலேயே அவனுடைய விஷயங்களை எடுத்துக் கூறி அவன் தலை நாணும்படி செய்து விடுவான். இவன், தன் மீது குற்ற மில்லாதிருந்தும் இதில் சம்பந்தப்பட்டதைப் பற்றி மிக மனவருத்தப் படுகிறான்; ஆதலின், நீதி அதிபாவர்கள் இந்த உலக அனுபவ மில்லாத சிறுவனுடைய நிரபராதத் தன்மையை நன்கு ஆலோசித்து இவனை விடுதலை செய்யவேண்டும்; இன்னும், இக்கொலை விஷயம் போலீஸ் அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு முன் போலீஸ் விசாரணை நடந்தபோது டாக்டர் திருமலை யென்பவன் ஆஜராகி, தான் அச்சண்டையில் மத்தியஸ்தனா யிருந்ததாகச் சாக்ஷியங் கூறினான். அப்பேர்ப்பட்டவன் இப்பொழுது ஆஜராகவில்லை; நேற்று ஜீவாம்பாள் இறந்ததைக் கேள்விப்பட்டவுடனே உண்மை வெளியாகி

விடுமென்று பயந்து அவனும் நேற்றிரவே மறைந் தோடி விட்டான். இதனுல் அவன் அச்சுதன் வேண்டுதலுக்காகப் பொய்ச் சாக்ஷி கூறி யிருக்கிருனென்பது விளங்குகிறது. என்னுடைய கக்ஷிக்காரனுகிய வாலிபனே அந்தச் சண்டை யில் அந்த டாக்டரை உண்மையில் பார்க்கவே யில்லை யென் றும், கிருஷ்ணப்பன் கொலையுண்டு வீழ்ந்ததைப் பார்த்துப் பொறிகலங்கித் தன் மனம் குழப்பமும் திகிலுமடைந்திருக் கும் சமயத்தில் அச்சுதன் ஒரு பொய்த் தோற்றத்தைத் தனக்குக் காட்டி டாக்டர் என்று தான் நம்பும்படி செய்து விட்டதாகவும் கூறுகிருன். நியாயாதிபதி யவர்களே! இவற்றை யெல்லாம் நீங்கள் நன்கு பரிசீலனை செய்வீர்க ளானுல் இவ்வாலிபன் மோசக்காரரால் ஏமாற்றப்பட்டு இக் குற்றத்தில் சிக்கிக்கொண்டிருக்கிரு னென்பது ஐயமற விளங்கும். இன்னும் இவன் தானுகவே ஆஜராகி நடந்த விஷயங்களை யெல்லாம் உள்ளது உள்ளபடியே கூறுகிருன். ஆனுல், இந்த அயோக்கியத்தனமான சண்டையில் கிருஷ் ணப்பனுக்குத் தான் துணையாகச் சென்றது மட்டும் பிசகு தானென்றும் சொல்லுகிருன்; இன்னும் இரண்டு விஷயங் களை நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்; முதலில் இவன் உலக அனுபவம் சிறிது மில்லாத- கபடமற்ற வாலி பன்; இரண்டாவது நடந்தவற்றை நேரில் ஆஜராகி மறைக் காமல் கூறியிருக்கிருன். ஆதலால் இவ்விரண்டு விஷயங் களை உத்தேசித்து இவனை விடுதலை செய்வது உங்கள் நீதிக் குப் பொருத்தமானதா யிருக்கும்" என்று பேசிமுடித்தார்.

இந்த வேண்டுதல் நியாயாதிபதியால் ஏற்றுக்கொள் ளப்பட்டது. ஆயினும், அவர், உலகையன் இத்தகைய கூட்டத்தில் சேர்ந்தது தப்பிதமென்றும், இனி அத்தகைய சேர்க்கைகளை அடியோடு விட்டுவிடவேண்டுமென்றும் அவன் மனதிற் பதியும்படி சில புத்திமதிகளை எடுத்துக்கூறி

அவன் கெட்ட கூட்டத்திற் சேர்ந்த அத்தப்பிதத்திற்காக மட்டும் மிகவும் சொற்பமாக அவனுக்கு ஒருநாள் காவல் தண்டனை விதித்தார்.

அச்சுதன் விஷயமும், ஜீவாம்பாள் விஷயமும் வெளிப்பட்டதும் பிரபுக்களின் வமிசத்தார்களுக்குள் அகௌரவமுண்டாயிற்று. அதனோடு ஜீவாம்பாளின் பிரேதத்தைப் பரிசோதனை செய்தபோது அவள் வயிற்றிற் கருவிருந்ததும் வெளிப்பட்டுவிட்டது. அது இன்னும் கௌரவக் குறைவை யுண்டாக்கிற்று. பிரேத பரிசோதனைக்காரர்கள் ஜீவாம்பாள் விஷத்தினாலேயே இறந்தாளென்று தீர்மானித்தார்கள். ஆனால் அது அவளுக்கு எங்கிருந்து எப்படிக் கிடைத்ததென்பது அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை. அதைப்பற்றி நீலாட்சியிடம் கேட்டார்கள். அவள் அது தனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டாள். அதன்மேல் பிரேத பரிசோதனைக்காரர்களும், டாக்டரும், அவள் ஏதோ ஒருவகைப் பைத்தியத்தினால் விஷத்தை அருந்தியிருப்பாள் என்று அபிப்பிராயங்கொண்டு சொன்னார்கள். பிறகு பிரேதம் ஆடம்பரமில்லாமல் அடக்கம் செய்யப்பட்டது. ஜீவாம்பாள் பைத்தியத்தால் விஷமருந்தி இறந்திருப்பாளென்று பிரேத பரிசோதனைக்காரர்கள் சொன்ன விஷயம் பத்திரிகையில் வெளிவந்தது. அதைப்பார்த்ததும் நீலாட்சி அபினிசத்துவாங்கிய ஒரு மருந்துக்கடைக்காரன், ஜீவாம்பாள் இறப்பதற்குச் சிறிதுநேரத்திற்குமுன் மாலையில் முகமூடியணிந்த ஒருமாது தன் கடைக்குவந்து அபினிச்சத்து வாங்கிச் சென்றதாக அதிகாரிகளுக்கு வெளியிட்டான். மற்ற இரண்டு மூன்று கடைக்காரர்களும் அவ்வாறே வெளியிட்டார்கள். அவ்விஷயங்களும் ஊரில் பிரஸ்தாபமாயின. அவற்றால் ஜீவாம்பாளே அந்தக் கடைகளில் விஷத்தை வாங்கினவளென்று தீர்மானித்துவிட்டார்கள்.

இவ்வாறு தன் இரகசியம் வெளிப்படாமல் வேறுவித மாகமாறி அடங்கிவிட்டதைப்பற்றி நீலாட்சிக்கு மனத் திருப்தி யுண்டாயிற்று. எனினும் அவளுக்கு வேறொரு விஷயத்தில் அதிகக் கவலை யேற்பட்டுவிட்டது. அவ்விஷ யம் தம்புசாமிப்பிள்ளையைப்பற்றியதே, அவள், "இந்த நிலை யில் நம் பெரிய தந்தைக்கு மீண்டும் விஷத்தைச் சேகரித்து நாம் வாக்களித்தபடி கொண்டுபோய்ச்சேர்ப்பது" முடியாது என்று மனக்கலக்க மடைந்தாள். இனி, அவள் புதிதாகமாறு வேடமணிந்துகொண்டு வெளியிற்சென்று எதுவும் வாங்க முடியாது. வெளியூருக்குப்போய் வாங்கிவரலாமென்றாலும் அதுவும் முடியாது; மேலும் காலதாமதமாகும். எப்படி யிருந்தபோதிலும் தன் பெரிய தந்தைக்குக் கடைசிவரை உதவிசெய்யவேண்டுமென்னும் கவலை அவளுக்கிருந்தது. அப்படிச் செய்தால்தான் அவனுடைய சொத்துமுழுவதும் தனக்குக் கிடைக்குமென்பதும், இல்லாவிடில் அவன் வேறு ஏற்பாடு செய்துவிடுவானென்பதும் அவளுக்குத் தெரியும். அவள் பணத்தை அலக்ஷியமாக நினைத்து விட்டுவிடக் கூடி யவளல்ல. எல்லாச் சௌக்கியங்களும் பணத்தினாலேயே தான் ஏற்படுமென்பதை நன்குணர்ந்தவள். இத்தகைய சுபாவமுடைய அவளுக்கு அப்பணம் எளிதாகக் கிடைக் கும் வழி யேற்பட்டிருக்கும்போது அதை இழந்துவிட மனம் இசையுமோ? ஒருபோதும் இசையாது. அதனா லேயே மிக்க வாதனை யடைந்தாள்.

இவ்விஷயங்கள் நடந்து சில தினங்கள் கழிந்தன. நீலாட்சி, கொஞ்சநாள்வரை மனக்கலக்கத்தால் வீட்டை விட்டு வெளியேறாமலிருந்தாள். அப்போது, "நாம் நம் பெரிய தந்தையின் விஷயத்தைப்பற்றி என்ன செய்யலாம்? நாம் மீண்டும்போய் அவரைப்பார்த்து, அவரிடம் ஏதாவது யோசனை கேட்கலாமா? அல்லது இங்கிருந்தபடியே அதற்

குரிய மார்க்கங்களைப்பற்றி ஆலோசிக்கலாமா?" என்று பல விதமாக எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் தம்புசாமிபிள்ளையின் மனைவி அவளிடம் வந்தாள். அவளைக் கண்டதும் நீலாட்சி மிகவும் துக்கமுடையவளாய், "ஆ! அன்றைக்கு நான் உன்னைவிட்டுப் பிரிந்துவந்தபின் எத்தனையோ துக்கமான சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன; நாம் எப்பொழுதும் துக்கத்தை அனுபவிக்கக் கூடியவர்களாகவே யிருக்கிறோம்; நான் மறுபடியும் உன்னைவந்து பார்க்காததைப்பற்றி நீ வித்தியாசமொன்றும் நினைக்கலாகாது; எனக்கு வரமுடியாதபடி அத்தகைய இக்கட்டுகள் நேர்ந்துவிட்டன; நான் இப்பொழுது உற்சாகமற்று மிகுந்த மனச்சோர்வுடையவளா யிருக்கிறேன்; மேலும் என் முகத்தை வெளியிற் காட்டுவதற்கு மிகுந்த அவமானமா யிருக்கிறது; நான் வெளியேறினால் என்னைப் பார்த்தவர்கள் தற்கொலை செய்துகொண்டவளுடைய மைத்துனியென்றும், கொலைக் குற்றத்திற்குப் பயந்தோடிவிட்டவனுடைய மனைவியென்றும் சுட்டிக்காட்டி எளனம் பேசுவார்கள்" என்றாள்.

தம்புசாமிப்பிள்ளையின் மனைவி:—(விம்மி விம்மி அழுது கொண்டு) என் அன்புள்ள நீலாட்சியே! இன்னும் சிலதினங்கள்வரை நீ என்னைப் பார்க்க வரமாட்டாயென்று எனக்குத் தெரியும்; இப்பொழுதிருக்கும் சந்தர்ப்பங்களைநோக்க நான் உன் வரவுக் கெதிர்பார்த்தல் முடியாது; அதனால் நானேவந்து உன்னைக் காண வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் வியாதியுற்றுப் படுத்துக்கொண்டிருந்தேன்; அதனால் முந்தியே வர முடியவில்லை. ஆதலால் இப்பொழுது வந்தேன்.

நீலா:—பெரியதாயே! என் பெரிய தங்கையை நீ எப்பொழுது பார்த்தாய்?

தம்-மனை:—நான் நேற்று அவரிடம் போயிருந்ததேன்;

உன் பெரியதந்தை தம்முடைய நிலைமையை மிக்க பொறுமையோடு சகித்துக்கொண் டிருக்கிருர்; அவருடைய தன்மையை நோக்கும்போது அவர் நிரபராதி யென்பது விளங்குகிறது; ஆ! நீலாட்சி! உன் கணவன், தன் சகோதரியைத் தூண்டிக் கிருஷ்ணப்பனைக் கொல்லச்செய்த விஷயத்தைப்பற்றி அளவற்ற கலக்கங்கொண் டிருப்பான்!

நீலா:—அஃதெப்படி யிருந்தாலுமிருக்கட்டும்; மனிதருடைய சுகமும் துக்கமும் ஒரு நிலையில் நிற்பனவல்ல; அவர் ஒரு சமயம் இந்தக்கலக்கங்கள் நீங்கிப் பிரபுப்பட்ட முடையவராய் விடுதலும் கூடும்; அதனை எவரும் தடுக்க முடியாது. அவர் அப்படிப் பிரபுவானல் நானும் சீமாட்டியாய் விடுவேன்.

தம்-மனை:—(அவள் அப்படி யாவதற்குத் திருப்தியுடையவளாய்) நீ அப்படியே சீமாட்டியாய்விடுவாய்; அதில் சந்தேகமில்லை. அதிருக்கட்டும்; உன் பெரியப்பன் விஷயத்தை இனிப்பேசுவோம்; உன்னைப்பற்றி அவர் நேற்று மிக்க அன்புடன் விசாரித்தார். சமீபத்தில் நேர்ந்த விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக என்னிடம் கேட்டார்.

நீலாட்சி, 'அப்படியா!' என்று சொல்லிவிட்டு, "நமக்கும் அவருக்கும் இருக்கும் இரகசியத்தைப்பற்றி நமக்கு வேறு எதையேனும் தெரிவிக்க உத்தேசித்து, நம்மிடம் இவள் வந்து கூறும்படி இவளிடம் அவர் ஏதேனும் இருபொருள் படும்படியான குறிப்பு வார்த்தைகள் கூறியிருப்பார்; அப்படிச் சொல்லியிருந்தாலும் இவள் புத்திக் கூர்மையில்லாதவளானபடியால் அதனுட் பொருளைத் தெரிந்து கொள்ளமாட்டாள். இப்பொழுது இவள் கூறும் வார்த்தைகளிலிருந்து நாம் அதைத் தெரிந்துகொள்ளலாம்"

என்று தீர்மானித்து அவளைநோக்கி, "அவர் கூறியவற்றைக் கூறு" என்று சொன்னாள்.

தம்-மனை:—"ஆ! திரவியநாதம் பிரபுவின் குடும்பத்திற்கு எத்தகைய அவமான விஷயங்கள் நேர்ந்துவிட்டன; நான் அவருக்குச் சமாதானம் கூறவேண்டும்; சிறைக் கூடத்திலிருக்கும் நான் கூறும் சமாதானம் சிறந்த தாக மாட்டாதெனினும் அவரை நேரில்கண்டு ஏதா வது சொன்னால் மாத்திரந்தான் என்மனம் ஆறுதலடை யும்" என்று சொன்னாள்.

நீலா:—"இதனால் திரவியநாதம்பிரபுவை அவர்காணவிரும்புவ தாகத்தெரிகிறது" என்று சொல்லிவிட்டு, "ஓ! அவர் நமக்கு அவ்விஷயத்தை ஞாபகமூட்டுகிறார்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டாள்.

தம்-மனை:—உனது பெரிய தந்தைக்குப் பத்திரிகைபார்க்க அனுமதியில்லையாதலால், அவர் ஜீவாம்பாள் இறந் ததை சவிஸ்தாரமாகச் சொல்லும்படி என்னிடம் கேட் டார். அந்த விஷம் ஜீவாம்பாளுக்கு எப்படிக் கிடைத் திருக்கக்கூடும் என்று ஆச்சரியப்பட்டார்; அதிலும் நீ இருந்த இடத்தில் அது எப்படிவந்து சேர்ந்தது என் பதைப்பற்றியே மிக வியப்படைந்தார்.

நீலா:—நீ அதைப்பற்றி அவருக்குச் சொல்லியிருக்கலாமே.

தம்-மனை:—மெதுவாகப்பேசு; ஆம்; நான் தெரிவித்தேன். மருந்துக்கடைக்காரர்கள், ஒரு மாது மாறுவேடத் துடன் வந்து அபினிச்சத்து வாங்கிச்சென்றதாக வெளிப்படுத்திய விஷயத்தையும், மற்ற விவரங்களையும் சொன்னேன்.

நீலா:—அந்தக் கடைக்காரர்கள் தெரிவித்த மாது ஜீவாம்பா ளாகத்தானிருக்கவேண்டும்; அதைப்பற்றி என் பெரிய தந்தை என்ன கூறினர்; என்னுடைய அஜாக்கிரதை

யால் அவ்விஷம் அவளுக்குக் கிடைத்திருக்குமென்று அவர் நினைக்கவில்லையே? அப்படி நினைக்காமலிருந்தால் நான் சந்தோஷப்படுவேன்.

தம்-மனை:—அவர் அவ்விதமாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நீ ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டியதற்கு ஒருவார்த்தைகூறி அதைப்பற்றிய விஷயங்களையும் கூறினார்.

நீலா:—அவற்றைக்கூறு.

உடனே தம்புசாமிப்பிள்ளையின்மனைவி அந்த வார்த்தையையும், அதைப்பற்றித் தம்புசாமிப்பிள்ளை சொன்ன விஷயங்களையும் கூறினாள். அந்தவார்த்தை-கத்தியென்றும், வைத்தியபத்திரிகை யென்றும் இருபொருள் படக்கூடிய குறிப்புச்சொல்லாயும், அதைப்பற்றிக் கூறியவிஷயங்கள், 'அவளைக் கத்தியொன்று என்னிடம் கொண்டுவரச்சொல்' என்றும், 'வைத்தியபத்திரிகையில் பாஷாணம் முதலியவை வாங்க வருகின்றவர்களைப்பற்றிக் கடைக்காரர்கள் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டும் என்ற பிரசுரம் வெளிவந்திருக்கிறது; ஆதலால் நீலாட்சி ஏதேனும் மருந்துகள் வாங்கக் கடைக்குப்போகும் விஷயத்தில் அதிஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்று அவளுக்குச் சொல்' என்றும் இரண்டு கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடியனவாயு மிருந்தன. இவற்றுள் பத்திரிகை விஷயத்தையே தம்புசாமிப்பிள்ளையின் மனைவி வைத்துக்கொண்டாள். நீலாட்சி இவற்றைக்கேட்டதும் அவர் கத்தியின் விஷயத்தையே கூறியிருக்கின்றாரென்று தெரிந்துகொண்டாள். ஜீவாம்பாள் கொலை சம்பந்தமான விஷயங்களைத் தம்புசாமிப்பிள்ளை கேள்விப்பட்டவுடன், நீலாட்சியே தான் சொன்னபடி விஷம் வாங்கி வந்திருப்பாளென்றும், அதை யருந்தியே ஜீவாம்பாள் மடிந்திருப்பாளென்றும், இனி விஷத்தைச் சேகரிப்

பது நீலாட்சியால் முடியாத காரியமென்றும், ஆதலால் அவள் மூலம் ஒரு கத்தி வரவழைத்து அதனால் தற்கொலை புரிந்து கொள்வதே நல்ல மார்க்கமென்றும் தீர்மானித்தாள். அத்தீர்மானத்தின்படியே நீலாட்சி ஒரு கத்தியைத் தன்னிடம் சேர்ப்பிப்பதற்கு அந்தச் சிலேடை வார்த்தையையும், அதைப்பற்றிய விஷயங்களையும் கூறினாள்.

மேற்கூறியபடி நீலாட்சி அவனுடைய உள்ளக் குறிப்பைத் தெரிந்து கொண்டவுடன் அதை இரகசியமாகத் தன் மனதிற்குள்ளடக்கி வைத்துக்கொண்டு மேலுக்குத் தம்புசாமிப் பிள்ளையின் மனைவியிடத்தில், "சரிதான்; அவர் வைத்தியப் பத்திரிகையில் கண்ட விஷயத்தை எனக்குத் தெரிவித்து ஜாக்கிரதைப் படுத்தச் சொல்லியிருக்கிறார்; அவருடைய இத்தகைய அன்பை நான் மறக்கமாட்டேன், நான் கூடிய சீக்கிரம் வந்து அவரைப் பார்ப்பேனென்று நீ அவரிடம் தெரிவி" என்று கூறினாள். தம்புசாமி பிள்ளையின் மனைவி போய் விட்டாள்.

அவள் போனவுடன் நீலாட்சி தன்னுடைய அறைக்குச் சென்று, வெளிநாட்டில் தான் வாங்கிக்கொண்டு வந்து அங்கே வைத்திருந்த கத்தியொன்றை யெடுத்து, "நாம் இனி வெளியில் சென்று கத்தி வாங்கி வருவது முடியாத காரியம்; ஆதலால் இதைக்கொண்டே காரியத்தை நிறைவேற்றிவிடவேண்டும்" என்று தீர்மானித்து அதை நன்றாகக் கூர் உண்டாகும்படி தீட்டி மடக்கி ஒரு சிறு காகிதப் பெட்டியில் மணலை நிரப்பி அதன் நடுவில்வைத்து மறைத்து மேலே மூடியால் மூடி, அதன் மேலும் கடுதாசித் துண்டைச்சுற்றி மடித்து நூலால் கட்டி, அதைத் திரவியநாதம் பிரபுவிடம் கொடுத்தனுப்பத் தீர்மானித்து அதற்கு அரக்கு முத்திரையிடப் போனாள்; அதற்குள் அவளுக்கு ஒரு

186505.

யோசனை யுண்டாயிற்று; அதாவது முத்திரையிட்டால் அவர் சந்தேகப்படுவாரென்று நினைத்தாள்; அதனால் அவள் "இதை நாம் அவரிடம் சீல் வைக்காமல் கொடுப்பதே நலம்; இதற்குள் மூக்குத்துள் இருக்கிறதென்று நாம் சொல்லி விட்டால் அவர் நம் சொல்லை நம்பிக்கொள்வார்; இதைத் திறந்து பார்க்கவேண்டுமென்று நினைக்கவே மாட்டார்" என்று முடிவு செய்து அதை யெடுத்துக்கொண்டு திரவியநாதம்பிரபுவிடம் போனாள்.

அவ்வாறு போனவுடன் அவரிடம், "என் மாமியார் எப்படியிருக்கிறார்கள்" என்று வினவினாள். அதற்குத் திரவியநாதம் பிரபு, "உன் மாமியாரா? அவளைப்பற்றிக் கேட்பானேன்; அவள் மிகுந்த மனவேதனையோ டிருக்கிறாள்; இவ்வளவு துக்க சம்பவங்கள் நடந்திருக்கும்போது அவள் மன நிம்மதியோடு எப்படியிருக்க முடியும்? நீ எப்பொழுது அச்சுதனை மணம்புரிந்து கொண்டாயோ அதிலிருந்து இக் குடும்பம் பலவிதமான கெடுதல்களுக்குள்ளாகியே வருகின்றது; உன் கணவனைப்பற்றி ஏதாவது சமாச்சாரம் கேள்விப் பட்டாயா?" என்று கேட்டான்.

நீலா:—அவர் வெளிநாட்டில் பரிதிபுரத்திலிருப்பதாகக் கடிதம் வந்திருக்கிறது.

திரவியநாதம் பிரபு:—ஆ! கடவுளே! அவன் நிர்ப்பாக்கியனான வாலிபன்; அவன் ஆயுள் வரையில் மறைவாகவே இருக்க வேண்டியவனாய் விட்டான். அவனுடைய வாழ்நாட்கள் துக்க மிகுந்தவைகளாகவே ஆய் விட்டன.

நீலா:—இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை; வெளி நாட்டில் எத்தனையோ மனதைக் கவரத்தக்க விஷயங்களிருக்கின்றன; ஆதலின் அவருக்கு வெளி நாட்டு வாசத்தில் அதிக விருப்பமுண்டு; நான் ஒரு முறை

வெளிநாட்டுக்குச் சென்றால் பின்னர் திரும்பி வரவே மாட்டேன்; நானும் கூடிய சீக்கிரம் அவரிடம் போய்ச் சேரப் போகிறேன்.

திர:—அதிருக்கட்டும்; துர்ப்பாக்கியமுள்ள உன் பெரிய தந்தையைப் போய்ப் பார்த்தாயா?

நீலா.—அதைப்பற்றித் தான் நான் தங்களிடம் தெரிவிக்க இருந்தேன்.

திர:—(திடுக்கிட்டு) அவர் விஷயத்தைப்பற்றியா! அவர் விஷயத்தில் நான் எதுவும் செய்ய முடியாதென்பது உனக்குத்தெரியும்; அப்படிச் செய்யக் கூடியதாயிருந்தால் என் புத்திரனை விசாரணையின்றியே விட்டுவிடும் படி நியாயாதிகாரியிடம் கேட்டிருப்பேனே.

நீலா:—அப்படி உம்முடைய உதவியை அவர் விரும்பக் கூடியவரல்ல; அது தகுதியற்ற விஷயமென்பது அவருக்குத் தெரியும்; அவர் வக்கீலாயிருக்கும்போது உமக்கே எவ்வளவோ புத்திமதிகளைக் கூறியிருக்கிறார்; அப்பேர்ப்பட்டவர் இப்பொழுது தகுதியற்ற காரியத்தில் பிரவேசிப்பாரா? அவர் நெடுநாளாக உம்முடைய நேயராயிருந்திருக்கிறார். உம்முடைய அநேகம் இரகசியங்களை அடக்கிவைத்துக்கொண் டிருந்திருக்கிறார்.

திர:—அதற்காக அவர் இப்போது என்னை என்ன செய்யச் சொல்லுகிறார்?

நீலா:—தங்களைக் காண விரும்புகிறார். கொஞ்ச நாளைக்கு முந்தியே இதைத் தங்களிடம் தெரிவிக்கும்படி கூறினார். இங்கு நடந்த சம்பவங்களால் நான் அதைச் சொல்ல முடியவில்லை.

திர:—சரி; நீலாட்சி! நீ சொல்வது வாஸ்தவந்தான்; அவர் வழக்கு சம்பந்தமாக எனக்கு அநேகம் உதவிகள் செய்

திருக்கிறார்; இப்பொழுது சில விஷயங்களைப் பற்றி அவர் என்னிடம் தனித்துப் பேசவேண்டியதாயிருக்கும்; ஆதலால் நான் தனித்து அவரிடம் செல்கிறேன்.

நீலா:—சிறைச்சாலை அதிகாரியிடம் தங்கள் பெயரைத் தெரிவித்தால் அவர், தாங்கள் சிறைச்சாலைக்குட் சென்று என்பெரிய தந்தையிடம் பேச அனுமதி யளிப்பார்.

திர:—(உடனே தன் கைக்கெடியாரத்தை எடுத்துப் பார்த்து விட்டு) இப்பொழுது மணி இரண்டரையாகிறது; இன்னும் சற்று நேரத்திற்குள்போய்ப் பார்க்கலாமல்லவா?

நீலா:—தடையின்றிப் போகலாம்.

திர:—நான் இப்பொழுதே புறப்பட்டுப் போகிறேன்.

அப்போது நீலாட்சி திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், "ஓ! மறந்து விட்டேன்; தாங்கள் தயவு செய்து எனக்கோர் உதவிபுரியவேண்டும்; அது மிகவும் சாதாரண விஷயந்தான்; ஒரு சிறு பொட்டணம் தருகிறேன்; அதில் மூக்குத்தூள் இருக்கிறது; அதைத் தாங்கள் என் பெரிய தந்தையிடம் சேர்த்துவிடவேண்டும்; புகையிலை சம்பந்தமான எந்த வஸ்துவும் சிறைச்சாலைக்குட் போகலாகாதென்பது அதிகாரிகளின் கண்டிப்பான உத்தரவு" என்றாள்.

திர:—(சிறிது அதிருப்தியுடனே) நான் ஒரு நாட்டிற்கதிபதியாயிருந்தும் இந்த அயோக்கியத்தனமான என் கௌரவத்திற்குச் சற்றும் பொருந்தாத இக்காரியத்தைச் செய்யும்படி நீ என்னிடம் சொல்கிறாய்!

நீலா:—தங்களுக்கு அது அகௌரவமாகத் தோன்றும் பக்ஷத்தில் தாங்கள் அதை நிறுத்தி விடலாம்; நானே பின்னொரு சமயம் அவரிடம் சென்று இதைக் கொடுத்து விடுகிறேன்; ஆனால், இதை நான் அவ்வாறு

கொடுக்கும்போது இந்த அற்ப காரியத்தைச் செய்வ தற்கும் தாங்கள் மறுத்துவிட்டதாக அவரிடம் சொல் வேன்.

திர:—வேண்டாம் வேண்டாம்; நீ அதைக்கொடு; நானே கொண்டுபோய் அவரிடம் சேர்த்து விடுகிறேன்; நீ பின்னொரு சமயம் சந்திக்கும்போது கூட நான் இப் போது இவ்வாறு மறுத்துக்கூறிய சங்கதியை அவ ரிடம் கூறி விடாதே.

நீலா:—நான் அப்படியே செய்கிறேன்; நீர் இவ்விஷயத்தில் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டும்; நீர் இதை என் பெரிய தந்தையிடம் கொடுக்கும்போது எவரும் பார்த்துவிடக் கூடாது.

இவ்வாறு சொல்லித் தான் தயாரித்து வைத் திருந்த பொட்டணத்தைத் திரவியநாதம் பிரபுவிடம் கொடுத்துவிட்டு அவள் விடைபெற்றுக்கொண்டு தன் இருப் பிடத்திற்குப் போய்விட்டாள். அப்போது அவளுடைய மனம் ஒரு நிலையிலில்லை. "இந்தக் காரியத்தை நம் பெரிய தந்தை எப்போது செய்வாரோ" என்று சிந்தித்தாள். அவ்வாறு சிந்தித்து, 'அவர் கையில் கத்தியிருப்பது யாருக் காவது தெரிந்து விட்டால் மிக்க ஆபத்துண்டாகுமாதலால் அவர் இன்றைக்கே செய்து விடுவார்" என்று முடிவு செய்துகொண்டாள். அப்படி முடிவு செய்துகொண்டதும், அவன் தனக்குச் சொத்தை உரிமையாக்கும் விஷயத்தில் சொன்ன உறுதிப்படி செய்தானோ இல்லையோ என்ற விஷயத்தில் அவளுக்குச் சந்தேக முண்டாயிற்று. அதனால் அவன் சொன்னபடி அவனுடைய லாயரிடம் போய் அதைப்பற்றி விசாரிக்கலாமா என்று நினைத்தாள். ஆனால், அவள் அவ்வாறு விசாரிக்கும் சமயத்திலேயே அவன் இறந்து விட்டால் அதைப்பற்றித் தன்மீது சந்தேகமுண்

டாகிவிடுமென்று நினைத்து அவ்வாறு லாயரிடம் செல்லவில்லை.

அன்றிரவெல்லாம் இவ்வித கலவரத்திலேயே அவளுக்குக் கழிந்தது; தூக்கமே பிடிக்கவில்லை. மறுநாள் விடிந்ததும் தன் பெரியப்பன் விஷயம் ஏதேனும் பிரசுரிக்கப்பட்டிருக்குமா என்று அன்று காலைப் பத்திரிகையைப்பார்த்தாள். அதில் ஒரு சமாசாரமும் இல்லை. பின், தன் பெரியதாயிடமிருந்து ஏதேனும் சமாசாரம் கிடைக்குமாவென்று பார்த்தாள்; அதுவும் வரவில்லை; நடுப்பகல் நேரமுமாய்விட்டது; அதனால் அக்காரியமொன்றும் நடக்கவில்லையென்று அவள் நினைத்துக்கொண்டாள். பின்னர் தன் பெரிய தந்தையைப்பற்றிய சமாச்சாரம் ஏதாவது கிடைக்குமென்று திரவியநாதம் பிரபுவிடம் சென்றாள்.

அப்போது அவருடைய மனைவி சங்கடமான நிலையில் படுத்திருந்தாள். அவர் அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அதனால் அங்குச் சென்ற நீலாட்சி அவரிடம் தனித்தொன்றும் பேசமுடியவில்லை. அங்கே சிறிது நேரம்வரை யிருந்தாள். அவள் தன்னுடைய பெரிய தந்தையின் விஷயத்தை அவரிடம் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அதனால் அவள் மனக்கலக்கத்துடன் திரும்பி வீட்டிற்கு வந்து விட்டாள். அன்றிரவு முழுதும் அவள் புத்தி மிக்க கலவரத்திலேயே இருந்தது. மறுநாள் பொழுது விடிந்ததும் பத்திரிகை வந்தது. அவள் அதை ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள்; பார்த்த ஆரம்பத்திலேயே, "தம்புசாமிப்பிள்ளையின் தற்கொலை" என்ற தலையங்கம் அவள் கண்ணுக்குத் தெரிந்தது. அவள் உடனே தன் பெரிய தந்தை யிறந்துவிட்டானென்பதை நிச்சயமாக அறிந்துகொண்டாள்; ஆவலோடு அதனைப் படித்தாள்; அதில் கீழ்க்கண்ட விஷயங்கள் வரையப்பட்டிருந்தன:—

"நேற்று மாலை சிறைச்சாலையிலிருந்த தம்புசாமிபிள்ளையின் வக்கீல் அவனிடம் வந்து ஒரு மணிநேரம் பேசிக்கொண்டிருந்து போய்விட்டார்; இரவு 9-மணிக்குக் கைதி தம்புசாமிப்பிள்ளை படுக்கைக்குப்போனான்; பதினொருமணிக்குப்பின் சிறைச்சாலைக் காவலன் வழக்கப்படி கைதியைப் பார்வையிடப்போனான். கைதி இறந்து கிடந்தான். அவன் ஒரு பேனாக்கத்தியால் தன் கழுத்தை அறுத்துக்கொண்டிருக்கிறானென்பது காவலனுக்குத் தெரிந்தது; அந்தக் கத்தி அவன் கைக்குக் கிடைத்த விஷயம் அறியமுடியவில்லை; அதைச் சேர்க்கத்தகுந்த ஆசாமியொருவரும் அங்கு வரவில்லை"

இவற்றைப் படித்துப்பார்த்ததும் நீலாட்சி உடனே தன் பெரியதாயின் வீட்டிற்குச் சென்றாள். அவள் அப்போது மிகுந்த துக்கத்தோடிருந்தாள். அவள் புருஷனாகிய தம்புசாமிப்பிள்ளை இறந்த விஷயம் அன்று காலையில்தான் அவளுக்குத் தெரியும். நீலாட்சி அவள் எதிரில் சென்றதும் அவளைப்போலவே தானும் மிகுந்த துக்கப்படுவதாக நடித்தாள். தம்புசாமிப்பிள்ளையின் லாயர் அப்போது வெளியில் நின்றுகொண்டு தான் வந்திருப்பதைத் தம்புசாமிப்பிள்ளையின் மனைவிக்குத் தெரிவிக்கும்படி வேலையாளிடம் சொல்லி யனுப்பினான். அந்த ஆள் போய் அவ்வாறே தெரிவித்ததும் தம்புசாமிப்பிள்ளையின் மனைவி மிகுந்த துக்கத்தால் சோர்வடைந்திருந்தபடியால் நீலாட்சியிடம் "நீ போய் வக்கீலை வரவேற்று அவர் சொல்வதைக்கேள்" என்று சொன்னாள். நீலாட்சி லாயர் வரவைக்கேள்விப்பட்டவுடன் மனதிற்குள் சந்தோஷமடைந்தாள். எனினும் அதை வெளிக்குக்காட்டாமல் மறைத்துக்கொண்டு மேலுக்குத் துக்கமுடையவள்போலவே தன் பெரியதாயின் சொற்படி வக்கீலுக்கு வந்தனமளித்து அவனை அழைத்துப்போய் ஓர்

அறையில் உட்காரவைத்து அவரை நோக்கி, "லாயரே! இது எவ்வளவு நெஞ்சு திடுக்கிடத்தக்க விஷயம்! என் பெரிய தாயாருக்குச் சகிக்கமுடியாத கஷ்டம் நேர்ந்திருக் கிறது" என்றாள்.

லாயர்:—உண்மையில் அது மிக்க துக்ககரமான சம்பவமே; நான் நேற்று உன் பெரியதந்தையைப் பார்த்த பொழுது இப்படி நேருமென்று கொஞ்சம்கூடக் கருத வில்லை. அவர் வழக்கப்படியே என்னிடம் சாந்தமாக வும் நிதானமாகவுமே பேசினார். நான் அவரிடம், "உம்முடைய சொத்துக்களை நீர் உயிலில் சொல்லி யிருக்கிறபடி செய்துவிட வேண்டியதுதானே" என்று கேட்டேன். அவர், "ஆம்" என்று முழுச் சம்மதி யோடும் கூறினார். அப்போது அவருடைய புத்தி எவ்வித மாறுதலு மடையவில்லை. அவர் சாதாரண நிலையிலிருந்தே—இப்போது நீயும் நானும் எப்படி யிருக்கிறோமோ அப்படியிருந்தே—அந்த வார்த்தை யைக்கூறினார். நான் வருத்தத்துடன் பின்வரும் விஷ யத்தைத் தெரிவிக்கிறேன்: அவர் செய்த குற்றம் அவ ருக்கு நன்கு தெரியும்; அவர் உயிருடனிருந்து விசாரணை நடந்தபோதிலும் தமக்கு இதே மாணந்தான் முடிவாகு மென்பதை அவர் உணர்ந்துகொண்டார்; அதனால் தான் தற்கொலை புரிந்துகொண் டிருக்கிறார்.

நீலா:—(படபடப்புடன்) நீர் என் பெரியதாயாருக்குத் தெரிவிக்க வேண்டிய சமாச்சாரம் ஏதாவதிருக்கிறதா? அவள் உம்மைப் பார்க்க முடியாத நிலையில் மிகச் சோர்வடைந்திருக்கிறாள். ஒரு சமயம் சொத்து விஷய மாய் என் பெரிய தந்தை செய்திருக்கும் ஏற்பாட் டைப் பற்றி நீர் அவளிடம் தெரிவிக்க விரும்பி யிருக்க

லாம்; அவள் உம்மால் தெரிந்துகொள்ளக் கூடிய விஷயமும் ஏதாவதிருக்கலாம்.

லாய:—அப்படி யொன்றும் அவசாமில்லை. ஆனால், இறந்த வருடைய சொத்துக்கள் என்ன ஏற்பாட்டிலிருக்கின் றனவென்பதை அவரைச் சார்ந்த உறவினர் தெரிந்து கொள்ள விரும்புவது இயற்கை. உனக்கு அத்தகைய எண்ணம் இப்போதிராதென்று நினைக்கிறேன்; ஏனென் றால் நீ அவற்றின் விஷயங்களைத் தெரிந்து கொண் டிருப்பாய்.

நீலா:—ஆம்; என் பெரிய தந்தை அவற்றைப் பற்றிய சில விஷயங்களைப் பத்து நாட்களுக்கு முந்தி உம்மிடம் கூறி யிருப்பதாக என்னிடம் சொன்னார்.

லாய:—அது வாஸ்தவந்தான்; ஆனால் நேற்று நடந்தது உனக்கு—

நீலா:—நேற்றுச் சமாசாரமா! என்ன எனக்கு வாக்குத் தத் தம் செய்ததற்குமேல் அவர் ஏதாவது செய்திருக் கிறாரா?

லாய:—(ஆச்சரியத்துடன் அவளை நோக்கி) நீலாட்சி! நான் சொல்லியதைக் கொண்டு நீ இதுவரை விஷயத்தை அறிந்துகொண் டிருக்கலாம்.

நீலா:—என்ன நீர் சொல்வது? எனக் கொன்றும் விளங்க வில்லை. அவர் என்னிடம் சொன்னதற்கு மாறாக ஏதா வது செய்திருக்கிறாரா?

லாய:—ஆம்; அதற்கு நான் காரணம் கேட்டேன்; அவர், நீயே அவரிடம் 'என்னைப் பற்றி யாதொரு கவலையு மடைய வேண்டாம்' என்று சொன்னதாகவும், அத னாலேயே அவ்வாறு செய்வதாகவும் கூறினார்.

இதைக் கேட்டவுடன் நீலாட்சி ஆ! என்று பெரு மூச்சு விட்டுக் கொண்டு ஒரு ஆசனத்தில் சாய்ந்தாள்.

அவள் அப்படிச் சாய்ந்தும் அவளுடைய மனத்துயரமான நிலைமையை லாயர் சிறிதும் கவனியாமலே, "ஆம்; அவர் அவ்வாறு கூறியதோடு, உனக்கு அவர் கலியாண காலத்தில் முப்பதினுயிரம் பவுன் சீதனமாகக் கொடுத்ததாகவும், அதனால் இப்போது உனக்குச் சொத்தை உரிமையாக்கலாமா என்று உன்னிடம் கேட்டபோது நீ 'எனக்கு முன் கொடுத்திருப்பதே போதும்; மேலும் பொருளுதவி வேண்டியதில்லை; உம்முடைய சொத்தை உமக்கு விருப்பமான வேறு வழியில் உபயோகப் படும்படி செய்து விடலாம்' என்று சொல்லி விட்டதாகவும், அதனுல் தமக்குத் தருமத்தில் அதை உபயோகப் படுத்த விருப்பமிருப்பதாகவும் சொல்லி அவ்வாறே செய்துவிட வேண்டுமென்று அதற்குரிய ஏற்பாடு செய்து விட்டார்" என்று சொன்னுர்.

நீலா:—(கம்மிய குரலுடன்) ஆ! அப்படியா சொன்னுர்?

லாய:—அதைப்பற்றிச் சந்தேகமேயில்லை; இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் நான் ஒருவார்த்தைகூடக் கட்டுப் பாடாகச் சொல்லமாட்டேன்; எல்லாம் அவர் சொன்னவைகளே.

நீலா:—(தன் மனக்கலக்கத்தை அடக்கிக்கொண்டு) அவர் கொண்ட நோக்கத்தின்படி சொத்தை என்னவித ஏற்பாடு செய்திருக்கிறுர்? எனக்காக நான் இதை விசாரிக்கவில்லை; என் பெரிய தாயாருக்கு ஏதேனும் ஆதரவு செய்திருக்கிறுரா என்பதைத் தெரிந்துகொள்ளவே கேட்கிறேன்.

லாய:—அவர் மனைவிக்குத் தக்க ஏற்பாடு செய்திருக்கிறுர்; வருஷத்துக்கு இருபதினுயிரம் பவுன் அவள் அடையத்தக்க ஏற்பாடாயிருக்கிறது! உனக்கு—

நீலா:—(தனக்கும் ஏதோ செய்திருப்பதாகப் போாவல் கொண்டு) எனக்கா! என்னசெய்திருக்கிறுர்?

லாய:—உனக்கு அவருடைய ஞாபகார்த்தமாக—எப்பொழுதும் அவருடைய எண்ணம் உன் மனதில் பதிந்திருக்கும்படி—இருபது பவுன் கொடுக்கும்படி எழுதியிருக்கிறார்; மீதியிருக்கும் முப்பத்தையாயிரம் பவுன்களையும் பனிரண்டு ஆஸ்பத்திரிகளுக்குப் பகிர்ந்தளிக்கும்படி எழுதிவிட்டார்.

இவற்றைக் கேட்டவுடன், நீலாட்சி, "இவ்விஷயத்தை என் பெரிய தாய்க்குச் சொல்லவேண்டும்," என்று சொல்லிவிட்டு விரைந்து அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள். அவள் அதிருப்தியினால் அவ்வாறு சென்றாளா, சந்தோஷத்தால் சென்றாளா என்பது லாயருக்கு விளங்கவில்லை. ஆனால், நீலாட்சி சொன்னபடி தன் சிறிய தாயிடம் செல்லவில்லை. அம்மாளிகையைவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்விட்டாள். அவ்வாறு போய்க் கதவை மூடிக்கொண்டு அதிக ஆத்திரத்தோடும் விசனத்தோடும் பைத்தியம் பிடித்தவள்போல் பிதற்றிக்கொண்டுமிருந்தாள். இவள், தன் கலியாணகாலத்தில் தம்புசாமிபிள்ளையைப் பயமுறுத்திப் பணம் பறித்ததற்காக அவன் இப்போது சாகுந்தறுவாயில் சரியான வஞ்சந் தீர்த்துக்கொண்டான். இவளால் தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டதோடு இவளையும் ஏமாற்றி அவதிப்படவிட்டான். அந்த இருபதுபவுன் இவளுக்களித்தது மிகுந்த பரிகாசத்துக் கிடமாகும்; அதை நினைத்து நினைத்து இவள் நெஞ் செரிந்துகொண் டிருக்கவேண்டு மென்பதே அவனுடைய நோக்கம்.

மேற்கூறியபடி நீலாட்சி கதவை மூடிவிட்டு மனவேதனை யடைந்துகொண்டிருக்கும்போது சில நாழிகைகள் கழிந்தபின் அந்த அறையின் கதவு தட்டப்படும் சத்தம் அவளுக்குக் கேட்டது. உடனே நீலாட்சி, தான் அப்போதடைந்திருந்த நிலையை எவரும் தெரிந்துகொள்ளாதபடி

அதிஜாக்கிரதையாய் அதை மாற்றிக்கொண்டு கதவைத் திறந்தாள். அப்போது அவளுடைய வேலைக்காரி எதிரில் தோன்றி "திரவியநாதம்பிரபு வந்திருக்கின்றார்" என்று கூறினள்.

நீலாட்சி உடனே அவரை வரவேற்றாள். பின்னர் அவரை ஓர் ஆசனத்தில் உட்காரச்செய்து, அவர் தன்னிடம் தம்புசாமிப்பிள்ளையின் விஷயத்தைப்பற்றிக் கேள்விகேட்க வந்திருப்பாரென்றும், அதற்கிடங்கொடாமல் தானே முதலில் எதையாவது அவரிடம் கேட்டுவிடவேண்டுமென்றும் நினைத்துத் தன் மாமியின்மீது மிகுந்த அக்கரையுடையவள் போல், "மாமி எப்படியிருக்கிறார்கள்?" என்று அவரிடம் வினவினள்.

திரவியநாதம்பிரபு:—அவளுடைய நிலைமை பரிதாபத்திற்கிடமானது; இதற்குமேல் இனி அதிகமாக அவளுக்கு வரவேண்டிய துன்பமொன்றுமில்லை. அவ்விஷயமிருக்கட்டும்; நான் இப்போது அதைப்பற்றி இங்கு வாவில்லை; வேறொரு பயங்கர சம்பவம் நடந்திருக்கிறது; அதைப்பற்றி உன்னிடம்—.

நீலாட்சி:—ஆ! அது எனக்குத் தெரியும்; அந்தத் துர்ப்பாக்கிய மனிதன் விஷயம்.

திர:—நீலாட்சி! உண்மையைச்சொல்; நான் இந்தக் கொலைக்குக் காரணமாகவில்லையே? தம்புசாமிப்பிள்ளை கொலை செய்துகொள்ளும்படியான கருவியை நீ என்னிடம் அன்று கொடுத்தனுப்பவில்லையே?

நீலாட்சிக்கு அவர் இவ்விதமான கேள்வி கேட்பாரென்பது முன்னரே தெரியும். ஆதலால், அவருடைய அபிப்பிராயத்தைச் சாமர்த்தியமாக மாற்றக்கருதி உடனே அவள், வியப்புற்றவள்போல் ஒருபாவனை காட்டினள். அது 'நானா செய்வேன்' என்று அவள் சொல்லுங் குறிப்பை

விளக்கிற்று. அதனால்அவர், 'இவள் செய்திருக்கமாட்டாள்' என்று நினைத்துத் திருப்தியடைந்து மேலே அவள் வார்த்தை பேசுதற்குமுன்னரே அவள் கரத்தைப்பற்றிக் கொண்டு, "அன்பார்ந்தமருகியே! நான் இவ்வாறு கேட்டதற்கு நீ மனவருத்தப்படாதே; மன்னிப்புச்செய்; நான் கேட்டது தவறு; உண்மை எனக்கு விளங்கிவிட்டது; நீ ஒருபோதும் அப்படிச்செய்திருக்கமாட்டாய்; இனி இதை விட்டுவிடுவோம். உன் பெரியதந்தை யிறந்ததனால் உனக்கேதாவது பலன் கிடைத்ததா?" என்று கேட்டார்.

நீலா:—ஒன்றுமில்லை; இதனாலேயே அவர் கொலைக்கு நான் உதவியா யிருக்கவில்லையென்பது விளங்கும்.

இதைக் கேட்டபின் திரவியநாதம்பிரபு சமாதானத்துடன் தம் வீட்டிற்குப் போய்விட்டார். அன்றிரவே நீலாட்சி புறப்பட்டுத் தன் புருஷனிருக்கு மிடத்திற்குப் போய் விட்டாள். மறுநாள் காலை திரவியநாதம் பிரபுவின் மனைவி கொஞ்சம் சௌக்கிய மடைபவள்போல் காணப்பட்டுத் தன் புருஷன் துடைமேற் சாய்ந்த படியே மரணமாகி விட்டாள்.

197-வது அத்தியாயம்

திரிபுரத்தில் தேவராஜூ முதலியவர்களின் வரவேற்பு—மீனாட்சி தன் பூஸ்திதிகளை ஞானம்பாளுக் களித்துவிடல்—சுந்தராபாயும் மீனாட்சியும் சந்தித்தல்—மீனாட்சியும் மடத்தில் சேர்ந்துவிடல்.

திரிபுரத்தில் மச்சநாதம் பிரபு, அவர் புத்திரி ஞானம்பாள், கமலாபுரம் ஜமீன்தார் தேவராஜூ, அவன் தாயார் முதலியவர்களை வரவேற்பதற்கு ஒரு பிரதானமான ஹோட்டலின் அறைகள் அங்குள்ளவர்களால் அலங்கரிக்

கப் பட்டிருந்தது. அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். மச்சநாதம் பிரபு இப்போது வெளிப்படையாகத் தமக்குப் பரம்பரையாக வுள்ள பிரபுப் பட்டத்தை யேற்றுக் கொண்டதாலும் தேவராஜனும் பெரிய அந்தஸ்துள்ள ஜமீன்தாராகிவிட்டிருப்பதாலும் அவர்களுடைய கௌரவங்களுக்குத் தக்கபடி அவர்களிடம் பலவேலைக்காரர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அப்படியே ஞானம்பாளுக்கும், தேவராஜின் தாயாருக்கும் ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு வேலைக்காரியாகப் பல வேலைக்காரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுடைய வரவு திரிபுரத்திலுள்ளவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையுண்டு பண்ணிற்று; ஏனெனில் தேவராஜன் அநேகம் தீரமான காரியங்களைச் செய்திருக்கிறானென்பதும் அவனுடைய மனைவியாகிய ஞானம்பாள் அவனுக்குத் தக்க அழகும் சிறப்பும் வாய்ந்தவளென்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனாலேயே அவர்களைக் கண்டு அவ்வூரார் அவ்வாறு சந்தோஷத்தை அடைந்தார்கள்.

அங்குப்போய்ச் சேர்ந்து ஒரு மணி நேரமானபின் தேவராஜன் அந்நாட்டரசரைத் தான் பேட்டி காண வேண்டுமென்று அவருக்குத் தெரிவித்தான். அரசர், தேவராஜனுக்கு மறுநாள் பேட்டி கொடுப்பதாக அறிவிக்கும்படி மந்திரிக்குச் சொன்னார். மந்திரி அன்று தேவராஜிடம் வந்து "நாளைக்காலையில் அரசர் சபை கூடுவார்; அப்பொழுது தங்களுக்குப் பேட்டி கொடுப்பதாகச் சொன்னார், ஆதலின், நான் அச்சமயம் வந்து தங்களை அழைத்துச் செல்கிறேன்" என்று சொன்னார். அதன்படியே மறுநாள் அவரால் தேவராஜன் அழைக்கப்பட்டான். பின் தேவராஜன், மச்சநாதம் பிரபு, ஞானம்பாள், தேவராஜின் தாயார் ஆகியவர்கள் அரசன் அரண்மனைக்குச் சென்றார்கள். சபாமண்டபம் மிக்க சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அநேகம் பிரபுக்களும்,

சீமாட்டிகளும், இராஜாங்க உத்தியோகஸ்தர்களும், கூடியிருந்தார்கள். அங்கிருந்த இந்திரபுரி மந்திரி அவர்களை அன்புடன் வரவேற்றார். அங்கிருந்தவர்கள் அதிசயித்து அவர்களை நோக்கினார்கள்.

அதன்மேல் இந்திரபுரி மந்திரி தேவராஜிடம் க்ஷேமங்களைப்பற்றி விசாரித்தார். அப்போது அங்கேயிருந்த பிரஞ்சு மந்திரி தேவராஜுக்கு உபசார வார்த்தைகள் கூறி அவனிடத்தில், "என் தேயத்து ஆசாமியாகிய மார்க்கபந்துவின் விஷயம் எப்படியிருக்கிறது?" என்று விசாரித்தார்.

தேவ:—அவர் மிகச் சௌக்கியமாகவேயிருக்கிறார்; அதைப் பற்றி நீர் அவருடைய வாக்கினாலேயே இரண்டு தினங்களில் கேள்விப் படுவீர்.

பிரஞ்சுமந்திரி:—அப்படியானால் அவன் திரிபுரத்திற்கு வரப் போகிறானா?

தேவ:—ஆம்; தமது வாலிப மனைவியுடன்.

பிர-மந்:—ஆ! அப்படியா! அந்த வாலிபன் கலியாணமா செய்து கொண்டான்?

தேவ:—ஆம்; கலியாணம் செய்து கொண்டான்; அவன் மணம் செய்து கொள்ளுமுன் எப்படி நெறியுடையவனாயிருந்தானோ அப்படியே மணஞ்செய்து கொண்ட பின்னரும் ஒழுக்கமுடையவனாயிருக்கிறான்.

பிர-மந்:—யாரை மணம் புரிந்து கொண்டான்?

தேவ:—ஓர் அழகானபெண்; அவளை நான் நேரில் பார்க்காவிட்டாலும் ஞானம்பாள் மூலம் கேள்விப்பட் டிருக்கிறேன்; ஞானம்பாளுக்கும் அவளுக்கும் நெருங்கிய சிநேகமுண்டு. லலிதாங்கிச் சீமாட்டியின் இரகசியங்களை நாம் ஆராய்ந்தபோது அவளால் கொலையுண்ட கோபாலனின் சகோதரியைப்பற்றி மார்க்கபந்து தெரிவித்தது உமக்கு ஞாபகமிருக்கலாம்.

பிர-மந்:—ஓ! எனக்கு ஞாபகமிருக்கிறது; நான் தெரிந்து கொண்டேன். அந்தக் கிருஷ்ணபாய் அழகும் ஐசுவரியமும் பொருந்தியவள். அவளையா கலியாணம்செய்து கொண்டான்?

தேவ:—ஆம்; அவர்கள் இந்திரபுரியைவிட்டுத் திரிபுரத்துக்கு ஒருவாரத்துக்கு முந்தியே புறப்பட்டு விட்டார்கள். இன்னும் இரண்டு தினங்களில் வந்து விடுவார்கள்.

பிர-மந்:—(புன்சிரிப்புடன்) புதிதாகக் கலியாணம் செய்து கொண்டவர்கள், புதிதாக மணஞ்செய்து கொள்ளப் போகிறவர்களைப் பார்க்க வருகிறார்களாக்கும்?

இதைக்கேட்டுத் தேவராஜு புன்னகை புரிந்தான்.

பிர-மந்:—"அவர்கள் வருவதைப்பற்றி நான் சந்தோஷ மடைகிறேன்; அவர்கள் வந்தால் நான் சந்தோஷமாக அவர்களை வரவேற்பேன்" என்று சொல்லிவிட்டுத் தம்மிருப்பிடத்திற்குச் சென்றார்.

அதன்மேல், பாக்கியபுரிக் கோட்டையிலிருந்த கவர்னரும், அவர் மனைவியும் தேவராஜு முதலியவர்களிருக்கு மிடத்திற்கு வந்தார்கள். அப்போது அவர் குமாரத்தியாகிய பூங்காவனமும் அவர்களுடன் வந்தாள். கவர்னர் சந்தோஷ முகக் குறியுடன் விளங்கினார். பூங்காவனத்தின் கலியாணம் கவர்னர் சம்மதத்துடன் ஒழுங்காக நடந்திருக்குமென்று தேவராஜு தெரிந்துகொண்டான். பூங்காவனம் தேவராஜைக் கண்டவுடன் சிறிது நாணத்தை அடைந்தாள். ஏனெனில் அவள், துரைத்தினத்துடன் ஓடியது அவனுக்குத் தெரியும்.

அப்போது அவளுடைய மனத்திலுண்டான நாணம் நீங்கும்படி தேவராஜு உடனே எழுந்து அவளுக்குப் பிரிய வசனங்கூறி அவளைத் தன் மனைவிக்கும், தாய்க்கும், மச்சநாதம்பிரபுவுக்கும் அறிமுகமாக்கி வைத்தான்.

அதன்மேல் கவர்னர் தேவராஜை நோக்கி, "நீ பாக்கியபுரிக்கோட்டையிலிருந்து தப்பி வந்ததைப்பற்றி நான் உன்னை மெச்சிக்கொள்கிறேன்; அது எவராலும் முடியாத காரியம்; நீ முன் இந்திரபுரி மந்திரியின் காரியஸ்தனுயிருந்தாய்; இப்போது கமலாபுரம் ஜமீன்தாராய் விட்டாய்; உனக்கு இந்தப் பதவி கிடைத்ததைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்; நமக்குள் முன் ஏற்பட்ட சிநேகமானது எப்பொழுதும் நீங்காதிருக்குமென்று நினைக்கிறேன்" என்று கூறினர். தேவராஜு "அப்படியே நீடித்திருக்கும்" என்று கவர்னரின் கையைப்பற்றிக் குலுக்கித் தன் சந்தோஷத்தை அறிவித்தான்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது பூங்காவனம் ஞானம்பாளுடனும், தேவராஜின் தாயாருடனும் சம்பாஷித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய வார்த்தையால் அவள் கபடற்றமாதென்றும், நற்குணமுடையவளென்றும் அவர்கள் தெரிந்து கொண்டார்கள். மச்சநாதம் பிரபுவும் அப்படியே கருதினர்.

அதன்மேல் அங்நாட்டரசர், குடும்பத்துடன் வந்து தேவராஜு முதலியவர்களை வரவேற்று உபசரித்தார். பின்னர், தேவராஜு முதலியவர்கள் அரசனிடம் விடைபெற்று ஹோட்டலுக்குச் சென்றார்கள்.

மறுநாள் ஹோட்டலில் ஒரு அறையில் ஞானம்பாள் தன்வேலைக்காரியுடன், தையல்வேலைசெய்யும் இரண்டுமாதர்களின்மூலம் கலியாண உடை தயாரித்துக்கொண்டிருந்தாள். அப்போது ஒருவேலைக்காரிவந்து ஒருபெயர் வரையப்பட்ட சீட்டை ஞானம்பாளிடம் கொடுத்து, "இந்தப் பெயருடைய ஒருமாது வெளியில்வந்து நிற்கிறார்கள்; தங்களைக் காணவேண்டுமென்கிறார்கள்" என்று சொன்னாள். ஞானம்பாள் அந்தச் சீட்டைப் பார்த்தவுடன், "ஓ! அந்த

மாதை நானும் பார்க்கவேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன்; சீக்கிரம் அந்த அறைக்கு அழைத்துவா" என்று சொல்லி ஒரு அறையை அவளுக்குக் காட்டிவிட்டு உடனே உயர்ந்த உடையணிந்துகொண்டு அந்த அறைக்குச் சென்றாள். அந்த மாதும் அங்குவந்து ஞானம்பாளைக் கண்டாள். இவ்விருவருக்கும் இதுதான் முதல் சந்திப்பு. ஆயினும் ஒருவர் தன்மையைப்பற்றி யொருவர் கேள்வியால் நன்குணர்ந்திருந்தார்கள். ஆதலால் இருவரும் முகமலர்ச்சியுடன் தழுவிக்கொண்டார்கள். பின்னர் இருவரும் ஆசனங்களில் அமர்ந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி ஒன்றும் பேசாமல் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்கள். அப்படியிருக்கும்போது வந்த மாது, மிக்க அழகும், இளமையும், சாந்தகுணமும், விவேகமும் உள்ளவளாக ஞானம்பாளுக்கு விளங்கினாள். அவளுக்கும் ஞானம்பாள் அவ்விதமாகவே தோற்றினாள். மேலும் அவள் ஞானம்பாளிடம் தோன்றிய சில குறிகளால் அவள் மிகுந்த கற்புடையவளென்றும் தெரிந்துகொண்டாள். (இங்குவந்தவள் மீனாட்சிச் சீமாட்டியே) இவ்வாறு இருவருக்கும் நல்ல அபிப்பிராயங்கள் உண்டாகி யிருக்கும்போது ஞானம்பாள் அவளைநோக்கி, "உன்னைப் பார்க்க நான் அளவற்ற மகிழ்ச்சி யடைகிறேன்; நீ, என் கணவருக்கு மிக்க நன்மைகள் புரிந்திருக்கிறாய்; அதன்பொருட்டு நான் உனக்கு மிகுந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

மீனாட்சி:—நான் உன்னைப் பார்த்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன்; உன்னை உண்மைச் சிநேகியாகவே கொள்கிறேன்; எனக்கு அன்புநிறைந்த நேயருக்கு நீ மனைவியானது எனக்கு அளவற்ற திருப்தியைச் செய்கிறது.

ஞான:—நீ இவ்வாறு கூறுவதற்காக நான் அளவற்ற

திருப்தி யடைகிறேன்; உன்னை என் சகோதரியாகவே பாவிக்கிறேன்

மீனு:— நானும் அப்படியே உன்னை நினைக்கிறேன்.

உடனே இருவரும் தழுவிக்கொண்டார்கள். அதன் மேல் மீனுட்சி ஞானம்பாளைநோக்கி, "மிகவும் உத்தமான இந்நாயகரை நீ அடையும்வரையில் நான் உன்னைப் பார்க்கக் கூடாதென்றிருந்தேன். இப்போது நீ இவரை அடைந்து விட்டதால் உன்னைக் கண்டுகொண்டேன். இனி நான் உத் தேசித்ததை நிறைவேற்றவேண்டும். சென்னூரில் அந்தப் பயங்கரமான விஷயங்கள் நடந்து என் தமக்கை மடத்தில் சேர்ந்த இரண்டுமாதகாலத்திற்குள் என் சொந்த விஷயத் தைப்பற்றி ஒரு முடிவுசெய்துகொண்டேன்" என்று சொன் னுள். அந்த வார்த்தைகளைக் கூறும்போது அவள் முகத்தில் ஒருவிதச் சோர்வான தோற்ற முண்டாயிற்று. அதைப் பார்த்ததும் ஞானம்பாள், "உன்முடிவென்ன? உன்முகம் வேறு படுவதற்குக் காரணமென்ன?" என்று வினவினுள்.

அதற்கு மீனுட்சி, "அதை இப்பொழுது நான் கூற முடியாது. கூடியசீக்கிரம் அந்த இரகசியம் உனக்குத் தெரி யும்; என்னை நீ சகோதரியாகப் பாவிக்கிறதாக வாக்குக் கொடுத்திருக்கிருய்; அஃதுண்மையானுல் நீ இதற்குமேல் வேறொன்றும் கேட்கலாகாது; நான் உன்னிடம் இன்னெரு வரமும் வேண்டுகிறேன்" என்றுள்.

ஞானு:—"என்னுல் கொடுக்கக் கூடியதைத் தானே நீ கேட் பாய்; ஆதலின் நீ விரும்பியதைக் கூறலாம்; அஃ தென்ன?"

மீனு:—நீ பரிசுத்த குணமும், அழகும் வாய்ந்த ஒரு தேவ கன்னிகைபோல் இவ்வுலகில் தோன்றியிருக்கின்றுய்; ஆதலால், என் விருப்பத்தைத் தடை செய்ய

மாட்டாய்; நானும் உன்னிடம் தகுதியற்றதைக் கேட்க மாட்டேன். நீ என்னைச் சகோதரியாகப் பாவிப்பதாகச் சொன்னதைக்கொண்டு என்மீது அதிக பக்ஷமுடையவளாயிருக்கின்ருயென்பதை நான் அறிந்துகொண்டேன்; அதற்குத் தக்கபடியே நானும் நடந்துகொள்வேன்; உனக்குச் சந்தோஷமுண்டாகச் செய்யும் பொருட்டு நான் என் உயிரையும் கூட விட்டு விட இசைவேன். உன்மேல் எனக்கேற்பட்டிருக்கும் அன்பிற்கறிகுறியாக நான் ஒரு வெகுமதி உனக்களிக்கப் போகிறேன்; அதை நீ தடை செய்யாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும்; இதுதான் நான் கோரும் வரம்.

ஞானு:—(ஆனந்தக் கண்ணீர் சொரிய) நான் என் அதை மறுக்கவேண்டும்; சிநேகத்திற் கறிகுறியாக நீ கொடுப்பதை நான் எவ்வித தடையுமின்றி ஏற்றுக்கொள்வேன்.

இவ்வாறு சொன்னவுடன் மீனுட்சி "நீ இவ்வாறு கூறியதற்கு நான் மிகவும் திருப்தியடைகிறேன்" என்று சொல்லிவிட்டு உடனே தன் கைக்குட்டையில் மறைத்து வைத்திருந்த ஒரு சிறு பெட்டியை யெடுத்து அவள் முன் வைத்து, "இது தான் உனக்கு நான்கொடுப்பதாகச் சொன்னது; இதை நீ பத்திரமாக வைத்துக்கொள்; இப்பொழுது திறந்து பார்க்காதே; நான் போனபின் திறந்துபார்; நான் விடைபெற்றுக் கொள்கிறேன்; வந்தனம்" என்று கூறி யெழுந்திருக்கப் போனுள்.

ஞானு:—என்ன இப்பொழுதே போய்விடப் போகிருயா?

மீனு:—நான் ஒரு மணி நேரமே உன்னுேடு பேச வேண்டுமென்று வண்டிக்காரனிடம் சொல்லி அவனை யழைத்து வந்தேன்; இப்போது நான் குறித்த நேரமாய்விட்டது; வண்டி வெளியில் காத்துக் கொண்டிருக்கிறது; ஆதலால் நான் போய்விடவேண்டும்.

ஞாந:—என் கணவரைப்பார்க்காமலா?

மீந:—"ஆம்; உன்னை மாத்திரம் காணவேண்டு மென்பதே என்னுடைய எண்ணம்; அதனாலேயே நீ தனியாயிருக்கும் சமயத்தை யறிந்து இப்போது உன்னிடம் வந்தேன்; நான் போய் வருகிறேன்; இன்னும் சில தினங்களில் என் விஷயத்தை நீ கேள்விப்படுவாய்; அதன் மேல் நீயும் உன் கணவரும் நானிருக்குமிடத்திற்கு வந்து என்னைக் காண்பீர்கள்?" என்று ஒருவித நடுக்கத்தோடு சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். அப்போது ஞானம்பாள் பிரிவாற்றாமையால் அவளுடைய காத்தைப்பற்றினாள். அவ்வாறு பிடித்தும் அப்பிடியைப் பறித்துக்கொண்டு துரிதமாக வெளியேறிப் போய் விட்டாள்.

அவ்வாறு சென்ற பின்பு ஞானம்பாள் ஒரு சோபாவில் சாய்ந்துகொண்டு, 'மீனாட்சியின் எண்ணம் எதுவாயிருக்கலாம்?' என்று யோசித்தாள். அவளுக்கொன்றும் விளங்கவில்லை. அவள் அவ்வாறு ஆழ்ந்த யோசனையிலிருந்தபடியால் மீனாட்சி வைத்துவிட்டுப்போன பெட்டியின் விஷயத்தைக்கூட மறந்து விட்டாள். சிறிதுநேரம் சென்றபின்பே அவளுக்கு அதன் ஞாபகம் வந்தது. உடனே அவள் அந்தப் பெட்டியைப் பார்த்தாள். அது மிகவும் அழகாக வேலை செய்யப்பட்டிருந்தது. அதைத் திறக்கும் சாவி அதிலேயே இருந்தது. அதைப் பார்த்தவுடன் அவளுக்குப் பழய ஞாபகம் ஒன்று திடீரென்று உண்டாயிற்று. அதாவது, ஆதியில் ஓர் இரவில் செல்வாம்பாளும் தானும் கூடியிருந்தபோது, செல்வாம்பாளுக்கொரு பெட்டியும், தனக்கொரு பெட்டியும் கிடைத்ததாகவும், அவற்றைத் திறந்து பார்த்தபோது தன் பெட்டியில் ரோஜாமாலை யிருந்ததாகவும், செல்வாம்பாள் பெட்டியில் மனிதரின் எலும்புகள்

இருந்ததாகவும் செல்வாம்பாள் கனவு கண்டு சொல்ல அதனால் பிற்பட்ட காலத்தில் தனக்கு இன்பமான வாழ்வும், செல்வாம்பாளுக்கு அழிவும் உண்டாகுமென்று பேசிக்கொண்டிருந்த விஷயம் நினைவிற்கு வந்தது. அதனால் ஞானம்பாள், "அந்தக் கனவிற்கண்ட பெட்டிதானே இது; இதற்குள் ரோஜாப்பூமாலை யிருக்குமோ; அப்படியிருந்தால் செல்வாம்பாள் கனவு மெய்யேயாகும்; அங்ஙனம் மெய்யானால் செல்வாம்பாளுக்கும் எலும்புகள் நிறைந்த பெட்டியொன்று இப்போது கிடைத்திருக்கக்கூடும்; இதைத் திறந்து பார்க்கலாமா?" என்று பலவாறாக யோசித்தாள். அதைப்பற்றி இவ்வாறுண்டான குழப்பங்களால் அவளுக்கு மனதில் திகிலுண்டாயிற்று. அதனால் அவள், "இதை நாமே திறக்கக்கூடாது; நம் கணவர், தந்தை, மாமியார் ஆகியவர்கள் முன்னிலையிற்றான் திறக்கவேண்டும்" என்று முடிவுசெய்துகொண்டு அச்சமயம் தேவராஜனும், மச்சநாதம் பிரபுவும் கடைத்தெருவுக்குப் போயிருந்தபடியால் அவர்கள் திரும்பிவந்து விட்டார்களா என்று பார்க்கும்படி வேலைக்காரியிடம் தெரிவித்தாள். அவள் அவ்வாறே பார்த்துவிட்டு வந்து, "அவர்கள் வந்து விட்டார்கள்" என்று சொன்னாள்.

உடனே ஞானம்பாள் அந்தப் பெட்டியை யெடுத்துக்கொண்டுபோய்த் தன் நாயகன் முதலியவர்களிடத்தில் காட்டி நடந்த விஷயங்களைக் கூறினாள். அவற்றைக்கேட்டு மச்சநாதம் பிரபு, "அவள் அவ்வாறு தன் அன்பிற்கறிகுறியாக ஒரு வெகுமானத்தை அளிப்பாளானால் அதைத் தடை செய்யாமல் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்றார்.

தேவ:—"ஆம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்று சொல்லி விட்டு, "மீனாட்சிச் சீமாட்டி தான் தனித்திருக்கப் போவதாகச் சொல்லி யிருக்கிறாளே; அப்படி

அவள் எங்கே போக நாடியிருப்பாள்?" என்று தனக்குள்ளாகவே ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

அப்போது தேவராஜின் தாயார் அந்தப் பெட்டியைப் பார்த்து, "ஒருவேளை இதில் கலியாணத்திற்கு வெகுமதியாக வயிர நகைகளை அவள் வைத்திருப்பாளோ?" என்று சொன்னாள்.

பின்னர் அவர்களால் அப்பெட்டி திறக்கப்பட்டது. அதில் உயர்ந்த பிரகாசமுள்ள வயிர நகையொன்றுமில்லை; மிக்க ஒளி பொருந்திய இரத்தினங்களுமில்லை. ஒரு சாதாரண முத்துமாலை மாத்திரம் முதலில் இருந்தது. அதைப் பார்த்தவுடன் ஞானம்பாளுடைய முகம் பீதியால் வெளுத்து விட்டது. ஏனெனில், செல்வாம்பாள் கனவிற் கண்டு கூறிய ரோஜாமலர் மாலையின் ஞாபகம் அவளுக்குவந்துவிட்டது. அதனால், அவள், "இது அவள் கனவிற் கண்டு கூறியதாகத்தானிருக்குமோ? ஆனால் அது ரோஜா மலர் மாலை; இதுவோ முத்துமாலை; இதற்கும் அதற்கும் பேதமிருந்தாலும் மாலையென்ற வகையில் ஒரு தன்மையே இருக்கின்றது" என்று கலவரமடைந்தாள். தேவராஜு அதைக் கையிலெடுத்துக்கொண்டு, "ஆகா! இது மிக்க அழகும் பிரகாசமுமுள்ளது" என்று வியந்து கூறினான். அவனுடைய தாயார், "ஆம்; மிக அழகாகத்தானிருக்கிறது. ஆனால், இது, இவ்வளவு உயர்ந்த சீமாட்டியால் வெகுமதியளிக்கக் கூடிய சிறப்பு வாய்ந்ததில்லை" என்று சொன்னாள்.

அப்போது மச்சநாதம்பிரபு மேலும் அப்பெட்டியைப் பார்த்து அதில் ஒருகடிதக்கட்டிருக்கக்கண்டு, "இதென்ன? இது!" என்று அதை வெளியில் எடுத்தார். அது ஒரு பத்திரம்போல் விளங்கிற்று. உடனே மச்சநாதம்பிரபு, "இது ஒரு பத்திரம் போலத் தெரிகிறது; என்ன பத்திரமாயிருக்கலாம்?" என்று அதைத் தேவராஜின் கையிற்கொடுத்தார்.

தேவராஜு அதைப் பிரித்து வாசித்துப் பார்த்தான்; அதில் எழுதப்பட்டிருந்த விஷயம் அவனுக்கு விளங்கி விட்டது. அப்போது அவனுக்குண்டான ஆனந்தம் அளவிடக்கூடாத தாயிருந்தது. அவன், "ஆ! என்ன தாராளசிந்தை! என்ன பெருங்குணம்! எத்தகைய நட்பு!" என்று ஞானம்பாளை நோக்கியபடியே கூறினன்.

மச்சநாதம் பிரபு:—என்ன நீ பேசுவதன் அர்த்தம்; அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது?

தேவரா:—"தாங்கள் ஞானம்பாளுக்குத் தாராள சிந்தையுடன் கொடுப்பதாக வாக்களித்த சீதனப் பொருளையும் அவள் விரும்பாத நிலைமை அவளுக்கு உண்டாகியிருக்கிறது; எனக்கோ கமலாபுரம் ஜமீன் சொந்தமாயிருக்கிறது; ஞானம்பாள் மிகுந்த ஐசுவரியத்தோடு மணஞ்செய்துகொள்ளப் போகிருள்" என்று சொல்லிவிட்டு ஞானம்பாளை நோக்கி, "ஞானம்! உன் குணத்திற்குத் தக்கபடியே உனக்கு எல்லாப் பாக்கியங்களும் அமைந்தன. எவ்வளவு ஐசுவரியம் சேர்ந்தாலும் அவை உன் உத்தம குணங்களுக்கு ஈடாக மாட்டா" என்று புகழ்ந்து கூறினன். ஞானம்பாள் முகத்தில் சந்தோஷக் குறி விளங்கிற்று. அதன் மேல் தேவராஜு அப்பத்திரத்திலுள்ள விஷயத்தைக் கூறத் தொடங்கி, ஞானம்பாளை நோக்கி, "ஞானம்பாள் மீனுட்சி இந்தப் பத்திரத்தின் மூலம் தன் மாளிகையை உனக் கெழுதிவைத்திருப்பதோடு முப்பதினுயிரம் பவுனும் உனக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிருள்" என்றுன். இதைக் கேட்டதும் மச்சநாதம் பிரபு, "அந்தக் கன்னிகையின் சிந்தை மிகத் தாராளமானது; அவளுடைய இச்செய்கை மிகவும் மெச்சத் தகுந்ததே" என்றுர். முன்னே அந்தப் பெட்டியில்

முத்துமாலையிருந்ததைப்பார்த்து அதிருப்தியடைந்த தேவராஜின் தாயார் இதைக் கேட்டவுடனே அளவற்ற ஆனந்தமடைந்து, "அந்தப் பெண்ணின் பெருங் குணத்தை யென்னென் றுரைப்பது!" என்று அதிசயித்துக் கூறினாள்.

இவ்வாறு மீனாட்சி ஞானம்பாளைச் சகோதரியாக நினைத்து அளவற்ற அன்புடன் அதிக பூஸ்திதியை அவளுக்குக்கொடுத்ததை அந்த ஞானம்பாள் சிந்தித்து அளவற்ற ஆனந்தமடைந்து கண்ணில் ஆனந்த பாஷ்பம் பெருக, "ஓ! இது எனக்கு எல்லை கடந்த பரிசு; இவ்வளவு வெகுமதியை ஏற்றுக்கொள்ளும் பெருமை என்னிடத்திலில்லை; ஆதலால் நான் இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன்" என்று சொன்னாள்.

நமது கதாநாயகனாகிய தேவராஜு அவள் கூறிய இத்தகைய அபிப்பிராயத்தைக் கேட்டதும், ஞானம்பாள் காத்தைப்பற்றி அவள் முகத்தை நோக்கி, "என் அன்பே! நான் சொல்வதைக்கேள்; மீனாட்சிச் சீமாட்டியினுடைய செய்கையை நினைக்கும்போது அவள், இவ்வுலக வாசையைத் துறந்து தனித்திருக்க முடிவு செய்து கொண்டாளென்பது விளங்குகின்றது. அப்பேர்ப்பட்டவளுக்கு பூஸ்திதி அவசிய மில்லை. ஆதலால்தான் அவற்றை உனக்குக் கொடுத்திருக்கிறாள். விஷயம் இப்படி யிருப்பதால் நீ மறுக்காமல் ஏற்றுக்கொள்வதுதான் நல்லது" என்று கூறினான். அதற்குமேல் ஞானம்பாள் பதிலொன்றும் கூறவில்லை. அதனால், மீனாட்சியின் ஏற்பாட்டிற்கு ஞானம்பாள் சம்மதிக்கிறாளென்பதைத் தேவராஜு தெரிந்து கொண்டான்.

இவர்கள், இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது அங்கிருந்து புறப்பட்ட மீனாட்சிச் சீமாட்டி, சென்னூருக்குப் போய்ச் சேர்ந்தாள். அவள் அங்குச்சென்றது, தன்

சகோதரியுடன் மடத்தில் சேர்ந்துகொள்வதற்கே. அத ஞலேயே தன் பூஸ்திதிகளை ஞானம்பாளுக்கு எழுதி வைத்துவிட்டு அவளிடம் அவ்வாறு கூறிவந்தாள். அவள் அங்குப் போய்ச் சேரும்போது இரவு நெடுநேரமாயிற்று. அதனுல் அப்போது அவள் குறிப்பிட்டுச் சென்றகாரியம் ஒன்றும் செய்வதற்கில்லை. மறுநாள் காலையில்தான் தன் சகோதரியைப் பார்க்கவேண்டியதா யிருந்தது.

மறுநாள் காலை மீனுட்சி, தன் சகோதரியிருந்த மடத் திற்குச்சென்று வெளிக்கூடத்தில் உட்கார்ந்துகொண்டு, "நம் சகோதரி எப்படி யிருக்கிருளோ? அவள் மனம் எவ் வித நிலைமையை அடைந்திருக்கிறதோ? அவளுடைய தேகத்தோற்றம் முன்னிருந்தமாதிரியே யிருக்கிறதோ இப்பொழுது மாறுதலடைந்திருக்கிறதோ?" என்ற சிந் தனையுட னிருந்தாள். சற்றுநேரம் சென்றபின் மடத் தின் கதவு திறக்கப்பட்டது. உடனே, சன்னியாச உடை தரித்து விசாரத்தால் முகம் வெளுத்த ஓர் உயர்ந்த மாது அங்கே வந்தாள். இவள்தான் முன் கௌரவமாயிருந்த சுந்தராபாய் இராஜகுமாரத்தி. இப்போது துக்காபாய் என னும் பெயருடனிருக்கிருள். இதுமுதல் இவளைத் துக்கபாய் என்றே வழங்குவோம்.

இந்தத் துக்காபாய் அவ்வாறு வந்ததும் மீனுட்சியைப் பார்த்துத் தன் தங்கையென்று தெரிந்துகொண்டாள். அவ் வாறு தெரிந்தும் அவளிடம் ஆவலோடு செல்லவில்லை. புன் சிரிப்புடன் சந்தோஷக்குறி காட்டவில்லை. நம்மைக் கடவுள் இவ்வாறு அமைத்துவிட்டார் என்ற சிந்தனையுடன் மலர்ச்சி யற்ற முகமுடையவளாய்த் தங்கையின் அருகில் சென் ருள். மீனுட்சிச் சீமாட்டியின் எண்ணமோ அப்படியில்லை. அவள்மீது மிக்க ஆவலுடையவளா யிருந்தாள். எனினும், சிறிதுநேரம்வரை 'அவளின் எண்ணம் எப்படி யிருக்கிற

தென்பதை அறிவோம்' என்று பேசாமலிருந்து அவள் சமீபத்தில் நெருங்கியவுடன் எழுந்து அதிக ஆவலோடு அவளை இறுகத் தழுவிக்கொண்டு, "ஆ! சுந்தராபாய்! என் அன்பார்ந்த தமக்கையே" என்று கதறித் துக்கத்தால் கண்ணீர் விட்டாள். உடனே சுந்தராபாய் அவளை நோக்கி, முகத்தில் சந்தோஷக்குறி காட்டாமல் சிறிது கடின பார்வையோடு, "உஸ்—வாயைமூடு; அந்தப் பெயரைக் கூறாதே; எனக்கிங்கே அப்பெயரில்லை; துக்காபாய் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறேன்; இனி அதையே சொல்லி என்னை அழை" என்று சொன்னாள். இவள் இவ்வித நிலைமையோடு கூறியது மீனாட்சியின்மீது வெறுப்படைந்தல்ல; அவள் மீது அந்தரங்கத்தில் மிக்க அன்புண்டு; எனினும் இவள் உலக ஆசையைத் துறந்து வைராக்கியசித்த மடைந்ததாலும், தான் அங்கே மாற்றுப்பெயர் கொடுத்திருப்பதால் உண்மைப்பெயர் வெளிவரலாகாதென்று நினைத்ததாலுமே அவ்வாறு சற்று அன்பில்லாதவள்போல் பேசினாள்.

மீனாட்சி:—நீ உலகவாழ்வைத் துறந்துவிட்டதற்காகக் கவலைப்படுகிறாயா?

துக்காபாய்:—கவலையா! இல்லை, இல்லை; எதற்காக நான் கவலைப்படவேண்டும். நான் உலகத்தில் அக்கிரமங்களைச் செய்துவிட்டேன்; அவை என் கௌரவத்தையும், சந்தோஷத்தையும் கெடுத்துவிட்டன; அதனாலேயே நான் உலகவாழ்வைத் துறந்தேன்; ஆகையால் நான் கவலைப்படக் காரணமில்லை. ஆனால் ஒன்றைப்பற்றி மாத்திரம்—

மீனா:—எதைப்பற்றிக் கவலையடைகிறாய்? அதைக்கூறு.

துக்கா:—அதைப்பற்றிப் பின்னர்க் கூறுகிறேன்; நான் சொன்னவற்றையெல்லாம் நீ நிறைவேற்றிவிட்டாயா?

மீனா:—"ஆகா! ஒன்றும் பாக்கியில்லாமல் எல்லாவற்றையும்

நிறைவேற்றிவிட்டேன்; நீ சொன்னபடி உன் பூஸ்திதிகளையெல்லாம் தருமசாலைகளுக்கு எழுதி வைத்து விட்டேன்; இந்த மடத்திற்கும் உரிமையாக்கச்சொன்னதையும் உரிமையாக்கிவிட்டேன்" என்று அவற்றிற்குரிய பத்திரங்களை அவளிடம் கொடுத்தாள்.

துக்:—நான் உனக்களித்த அரண்மனையை நீயேதானே வைத்துக்கொண்டிருக்கிறாய்?

மீனு:—நான் அதை என்வசமாக்கிக்கொண்டேன்; ஆனால்—, அதை வேறொருவருக்குப் பரிசாக அளித்துவிட்டேன்.

துக்:—ஆ! வேறொருவருக்கா கொடுத்துவிட்டாய்? என்னுடைய கணவனின் மெழுகுப் பிரதிமையை என்ன செய்தாய்? அழித்துவிட்டாயோ?

மீனு:—ஆம்; அதனோடு என் கணவருடைய உருவச்சிலையையும் அழித்துவிட்டேன். நிலவரை வழிகளையும் மூடிவிட்டேன்.

துக்:—உன் கணவன் சிலையையும் ஏன் அழித்துவிட்டாய்? அவ்விடத்தைவிட்டு எங்கேனும் போய்விடப் போகிறாயோ? உனக்குத் தேசாபிமானம் இல்லையோ? உலகப் பொருள்களில் ஆசையில்லையா?

மீனு:—தேசாபிமானத்தைப்பற்றித் தீவிரமாக வேலைசெய்ய எனக்குச் சக்தியில்லை; என் மனம் இப்பொழுது பொருளை விரும்பவில்லை, வேறொரு வழியை நாடியிருக்கின்றது; அங்கே வாசஞ் செய்யவும் எனக்கிஷ்டமில்லை.

துக்:—இக்காரணங்களாலே நீ அரண்மனையை வேறொருவருக்குக் கொடுத்துவிட்டாயாக்கும்?

மீனு:—ஆம்.

துக்:—யாருக்களித்தாய்?

மீனு:—அழகும், நற்குணமும் வாய்ந்தவளும், நமது நண்ப

ராகிய தேவராஜனைப் பிரபுவுக்கு மனைவியாய்க் கமலாபுரம் சீமாட்டியாயிருப்பவளுமாகிய ஞானும்பாளுக்குக் கொடுத்து விட்டேன்.

துக்:—(சிறிதுநேரம் யோசித்து) அந்த அரண்மனையை நீ விரும்பாத நிலையில் அந்த உத்தமமாதுக் களித்ததைப்பற்றி மகிழ்ச்சி யடைகிறேன். உனக்குச் சொந்தமான மற்றொரு மாளிகை?

மீன:—அதுவா? அதை நான் விற்று விட்டேன்.

துக்:—அப்படியானல் அதை விற்ற பணம் உன்னிடம் அதிகமாயிருக்கும்; நீ அதை வைத்துக்கொண்டு எங்கும் சஞ்சரிக்கலாம்.

மீன:—நான் அந்தப் பணத்தை வைத்துக் கொள்ளவில்லை. அவற்றை மூன்று பாகமாக்கி ஒருபாகத்தை, உன்னல் குறிப்பிடப்படாத வேறு தர்ம வைத்தியசாலைகளுக்கும், ஒருபாகத்தை ஞானும்பாளுக்கும், ஒரு பாகத்தை நீ சேர்ந்திருக்கும் இந்த மடத்திற்கும் உரிமையாக்கி விட்டேன்.

துக்:—அப்படியானல் நீ உலக வாழ்வைத் துறந்து விட்டாயோ?

மீன:—ஆம்; எனக்கொரு கவலையுமில்லை; ஆனல் ஒரு கவலை மாத்திரமிருக்கிறது.

துக்:—என்ன கவலை?

மீன:—உன்னைப் பிரிந்திருக்கும் கவலை.

துக்:—ஆ! நீ மெய்யாகவே அதைப்பற்றிக் கவலை யடைகிருயா? அப்படியானல் நான் அதைக் குறித்து உன் மீது மிக்க பரிவுள்ளவளாவேன்.

மீன:—ஆம், மெய்யே. நீ எதையோ குறித்து வருந்துவதாகச் சொன்னயே; அதென்ன!

துக்:—ஓ! அதுவா? இப்பொழுது சொல்லுகிறேன்; நானும் உன்னைப் பிரிந்ததற்காகவே வருந்துகிறேன்.

மீனு:—இப்படி இருவருக்கும் ஏற்பட்டிருக்கும் மனத்துயரம் தீர்வதற்கு நான் ஒரு முடிவு செய்துகொண்டிருக்கிறேன்.

துக்:—என்ன முடிவு செய்திருக்கிறாய்?

மீனு:—நானும் உன்னுடன் மடத்திலிருக்கத் தீர்மானித்து விட்டேன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் துக்காபாய்க்கு மனத்திலிருந்த விசனமுற்றும் நீங்கிவிட்டது; அளவற்ற ஆனந்த மடைந்தாள். உடனே மீனாட்சியைத் தழுவிக் கொண்டு, "ஆ! என் தங்கையே! நீயே உண்மைச் சகோதரி" என்று பலவாறு கொண்டாடினாள்.

அதன்மேல் மீனாட்சியும் அந்த மடத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கித் தானும் சன்னியாசத்தை அடைந்துவிட்டாள். தன் பெயரையும் மீராபாய் என்று மாற்றிக்கொண்டாள். இருவரும் சீமாட்டிகளென்ற தன்மை நீங்கித் துறவு பூண்டவர்களாய் அந்த மடத்திலிருந்தார்கள்.

198-வது அத்தியாயம்

அச்சுதன் செல்வாம்பாள் இவர்களின் முடிவு.

வெளிநாட்டிலுள்ள ஜெயபுரியின் ஒரு ஹோட்டலில் ஒருவன் ஒரு அறையிலுட்கார்ந்து ஆகார வகைகள் அருந்திக் கொண்டிருக்கிறான். குடிவகைகளும் அவன் முன் மேஜைமேல் இருந்துகொண்டிருந்தன. அவன் அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பருகிக் கொண்டும், சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு மிருந்தான். அவனுடைய நிலைமை, அவன் அவற்றை விருப்பத்திற்காகக் குடிக்க

வில்லையென்பதையும், மனதிலுண்டாகியிருக்கும் ஏதோ ஒரு பெருங் கலக்கத்தை மாற்றிக்கொள்ளும் பொருட்டே அவ்வாறு குடிக்கிருனென்பதையும், அவனுடைய உள்ளத்தில் பெருங் கலக்கமுண்டாகியிருக்கிறதென்பதையும் தெரிவித்தது. அவன் சட்டைப்பையில் ஒரு கைத்துப்பாக்கியிருந்தது. அவன் அதையெடுத்து அதில் குண்டு போட்டுக் கெட்டித்திருப்பது சரியாயிருக்கிறதாவென்பதைக் கவனித்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு மீண்டும் சட்டைப்பைக்குள்ளேயே மறைத்து வைத்துவிட்டான். பின்னர் எழுந்து அந்த அறையில் பயித்தியம் பிடித்தவனைப்போல அங்குமிங்கும் உலவிக்கொண் டிருந்தான்.

அச்சமயத்தில் அந்த அறையின் கதவு திறக்கப்பட்டதும் செம்பட்டை மயிரும், முறுக்கிவிட்ட மீசையும், குறுகிய தாடியுமுடைய ஒரு மனிதன் திடீரென்று உள்ளே வந்தான். அவன், முன் அங்கேயிருந்தவனுடைய பழய நண்பன். அவனைக் கண்டவுடன் அறைக்குள்ளிருந்தவன் திடுக்கிட்டான். உடனே வந்தவன், ஆச்சரியத்துடன் அங்கிருந்தவனைநோக்கி, "ஓ! நீ அச்சுதனல்லவா?" என்றான்.

அவன் அச்சுதனே; முன்னுரைத்தபடி ஜீவாம்பாளிறந்தவுடன் கிருஷ்ணப்பனுடைய கொலைக்குற்றத்திற்கஞ்சிப் பரிதிபுரத்திற்குப்போய் அங்கிருந்தவர்கள் தன்னைப் பிடித்துக் கொடுத்து விடுவார்களென்ற சந்தேகமுண்டானபடியால் அவ்விடத்திலுமிராமல் திகில் பட்டோடி வந்து இந்த ஜெயபுரியில் தங்கியிருந்தான்.

மேற்கூறியபடி வந்தவன் முன்னொருசமயம், நயனபுரி இராஜ்ஜியத்தைச் சேர்ந்த திரிபுரம் என்னும் நகரில் செல்வாம்பாள்மீது காதல் கொண்டு அவளிடம் தன் கருத்தை வெளியிட்டு அவளால் நிராகரிக்கப்பட்ட பெரியசாமிப் பிரபு. அவன் அவ்வாறு வினவியவுடன் அச்சுதன் அவனை

நோக்கி, "என் அன்பார்ந்த சிநேகிதனே! நீ இதுவரை எங்கிருந்தாய்?" என்று கேட்டான்.

பெரியசாமி:—நான் பெரும்பான்மையும் நயனபுரி நாட்டில் வசித்து வந்தேன்; உன்னுடைய விஷயங்களைப் பத்திரிகைகளின் மூலமாகவும், அறிந்தோர் மூலமாகவும் தெரிந்து கொண்டேன். அவற்றைப்பற்றி எனக்கு மிகுந்த வருத்தமாயிருந்தது.

அச்:—அவை பயங்கரமானவைகளே! விசனத்தை யுண்டாக்கக் கூடியவைகளே.

பெரி:—நீ உன் வாசஸ்தானத்தைவிட்டு மறைந்தோடி வந்து பரிதிபுரத்திலிருந்தும் அங்கு மிருக்க ஏதுவின்றி இங்கே ஓடிவந்தது மிகவும் பரிதபிக்கக் கூடியது; இப்போது உன் மனம் ஒரு நிலையிலிராதென்று நினைக்கிறேன்.

அச்:—என்ன செய்யலாம்; என்னுடைய கெட்டகாலம் இப்படியாக்கி விட்டது; என் தங்கை யிறந்தாள்; தாயுமிறந்தாள்; தாயின் பிரேதச் சடங்கு செய்வதற்குக் கூட நான் இல்லாமல் ஓடி வரவேண்டியதாய் விட்டது.

பெரி:—நீ மிக்க பரிதாபமான மனிதனே; உன் மனைவியெங்கே?

அச்:—அவளை நான் ஊரில்தான் விட்டு வந்தேன். அவளுக்குப் பெரியதந்தை ஒன்றும் வைக்காமல் இறந்து விட்டதாகவும், அதனால் அவள் பேரிடி விழுந்தவள் போல் மிகுந்த கலக்கத்திலிருக்கிறாளென்றும் கேள்விப்பட்டேன்.

பெரி:—அவள் பெரிய தந்தையின் குணத்தைப்பற்றி நான் கேள்விப் பட்டேன்; அந்தோ! எல்லாம் துக்கம். அவள் நிலைமை அப்படியா ஆய்விட்டது; நீ முதலிற்

பரிதி புரத்திற்கு வந்தும் அங்கில்லாமல் ஏன் வெளி யேறி விட்டாய்?

அச்:—என் தேசத்துத் துப்பறியும் உத்தியோகஸ்தர்கள், நான் எங்குச் சென்றாலும் என்னைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தார்கள் என்ற சமாசாரம் எனக்குத் தெரிந்தது; அதனோடு பரிதிபுரத்து அதிகாரிகளும் என்னைப் பிடித்து என் தேசத்து அதிகாரிகளிடம் ஒப் பித்து விடும் கருத்துக் கொண்டிருப்பதாகத் தெரிந் தது. இக்காரணங்களினாலேயே நான் பரிதி புரத்தி லும் இல்லாமல் ஓடிவந்து விட்டேன்.

பேரி:—நெடுங்காலத்துக்கு முன் பிச்சையன் உனக்கு உதவியாயிருக்க நீ ஒருவனோடு சண்டை போட் டாயே; அவன் இப்போது கமலாபுரம் ஜமீன்தாரா யிருக்கிறான்; அவன் பெயர் நினைவிலிருக்கிறதல்லவா?

அச்:—ஓ! அவனா? தேவராஜா.

பேரி:—அந்தச் சண்டை நடந்த சந்தர்ப்பத்தை நினைக்கும் போது இரண்டு பெண்களின் பெயர்கள் ஞாபகத்திற்கு வருகின்றன; ஒருத்தி பெயர் ஞானம்பாளென்றும், ஒருத்தி பெயர் செல்வாம்பாள் என்றும் நினைவிலிருக் கின்றன. ஞானம்பாள் மிக்க அழகுடைய பெண்; செல்வாம்பாளும் அத்தகையவளே; இவர்களுள் ஞானம்பாள் அந்தக் கமலாபுரம் ஜமீன்தாராகிய தேவராஜை மணம்புரிந்து கொண்டு பெரிய சீமாட்டி யாகவிருக்கிறாளென்று கேள்வி; செல்வாம்பாள் துர் நடத்தையுடையவளாய்த் தன் இஷ்டம்போல் திரி யத்தொடங்கி முன் கிருஷ்ணப்பனோடு வெளியேறிப் போய் முடிவில் இபொழுது தனபாலனோடுசேர்ந்தி ருக்கிறாளாம்.

இவன் முன் செல்வாம்பாளை நன்றாகத் தெரிந்தவனா

யிருந்தும், அவளின் காதல் மயக்கத்தால் அவள் அங்கே வரக் கூடுமென்று கேள்விப்பட்டு அவளைப் பார்க்கலா மென்று நினைத்து வந்தவனாதலின் அதை வெளியிடாமல் மறைத்துக்கொண்டு அவளைப் பற்றி விசாரிக்கும் நோக்கத் துடன் இவ்வாறு அவளை யறியாதவன்போல் பேசினான்.

இவ்விஷயங்களைக் கேட்டு, முடிவில் செல்வாம்பாள் சமாசாரங்களைக் கேட்டவுடனே அச்சுதன் முகத்தில் இரத் தம் ஏறிச் சிவந்து ஒருவகை ஆத்திரம் ஜொலித்தது. இந் நிலைமையைப் பார்த்தவுடன் பெரியசாமி அவனை நோக்கி, "என்ன! செல்வாம்பாள் விஷயத்தைக் கேட்டவுடன் உனக்கு ஒருவகை ஆத்திரமுண்டாகிறதே! இதற்குக் காரண மென்ன?" என்று கேட்டான். அச்சுதன் கையை முஷ்டி யாகப் பிடித்துக்கொண்டு மேஜைமேல் ஓங்கியடித்து, "ஆம்; அவள் செய்தி எனக்கு அளவற்ற ஆத்திரத்தையுண் டாக்கக்கூடியதே; நான் அவளை எப்படி நேசித்தேன் தெரி யுமா? ஆனால் அவள் செய்த அவமதிப்பு......" என்று மேலும் ஏதோ ஆத்திரமாகக் கூறப்போனான். அதற்குள் பெரியசாமி, "என்ன நீ சொல்வது அதிசயமாயிருக்கிறது; உனக்கோ அழகான மனைவியிருக்கிறாள்; அப்படி யிருக்க இந்தச் செல்வாம்பாளிடம் உன் மனம் சென்றிருக்கின்றது; இது அதிசயமல்ல; அவள் எப்பேர்ப்பட்டவர்களையும் மயக் கித் தன்னடியில் விழச்செய்யும் வனப்பும், சாமர்த்தியமு முடையவள்" என்று சொன்னான்.

அச்:—ஆம்; அத்தகையவளே; அவளிடத்தில் நான் வைத் திருக்கும் அன்பு அளவுகடந்தது; ஆனால் அவளை இப் போது மிகவும் வெறுக்கிறேன்; ஆயினும், அவள் என் சமீபத்தில் வருவாளாயின் அவளை ஆவலோடு தழுவிக் கொள்வதோடு என் ஆவியையே அவளுக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிடுவேன்.

பேரி:—என்ன நீ பேசுவது முன்னுக்குப்பின் விரோதமா யிருக்கிறது; ஒருமுறை நேசிக்கிறே னென்கிறாய், ஒருமுறை வெறுக்கிறேனென்கிறாய்; முன் எதாவது அன்புகாட்டி இப்போது நீவெறுக்கும்படியான காரிய மேதேனும் செய்துவிட்டாளா?

அச்:—இப்பொழுதொன்றுமில்லை; முன் ஒருசமையம் நான் வெறுக்கும்படி என்னை அவள் அவமதித்திருக்கிறாள். நான் இயற்கையில் அவளைக்கண்டு மயங்கி அவள்மீது அன்பு செலுத்தினேன். அவள் எனக்கு மிகுந்த மன வேதனையை உண்டாக்கிவிட்டாள்.

இதைக்கேட்டதும், பெரியசாமி "அவளுக்கும் உனக் கும் என்ன நடந்தது?" என்று அச்சுதனிடம் கேட்டான். அவன், "இதோ சொல்கிறேன்" என்று ஒரு கிண்ணத்தில் சாராயத்தை ஊற்றிப் பருகினான். அந்தச்சமயத்தில் திடீ லென்று அவ்வறையின் கதவுதிறக்கப்பட்டதும் ஒருமனி தன் உள்ளே வந்தான். அச்சுதன் அவனைக்கண்டதும் தன்னைப் பிடிக்க வெளியேறித்திரியும் துப்பறிபவர்களில் ஒருவனா யிருக்கக்கூடும் என்று பயந்து தன் முகத்தை அவனுக்குக் காட்டக்கூடாதென்னும் எண்ணத்துடன் தலை யைக் குனிந்துகொண்டான்.

வந்தவன் யாரெனில், முதல் முதல் அச்சுதன் தேவ ராஜோடு சண்டைபோடுங்காலத்தில் அவ்வச்சுதனுக் குத வியாயிருந்த காப்டென் பிச்சையனே; இவன் ஒரு காரிய மாக அங்கேவந்து பெரியசாமியை ஓரிடத்திற்கண்டு பேசி விட்டு வேறொரு இடத்திற்குப் போயிருந்தான். அப்போது பெரியசாமி அந்த ஹோட்டலில் தங்குவதாகவும், அங்கே வரும்படிக்கும் அவனிடம் சொல்லி யிருந்தான். அத னாலேயே அங்கே வந்தான். அவன் அப்படி வரும்போது

ஓர் அழகியமாதும் ஆடவனும் வண்டியிலிருந்து இறங்கி அந்த ஹோட்டலுக்குள் வேறொரு பக்கத்தில் செல்வதைப் பார்த்து விட்டு வந்தான்.

அதனால் அவன் உள்ளே சென்றதும் பெரியசாமியை நோக்கி, "இங்கே இப்போது புதிதாக மூவர் வண்டியில் வந்திறங்கி, உள்ளே புகுந்தார்களே; அவர்களைப் பார்த்தாயா?" என்றான்.

பெரி:—நான் பார்க்கவில்லை.

பிச்சையன்:—செல்வாம்பாளைப்பற்றி உனக்கு ஞாபகமிருக்கிறதா?

அங்கே வந்தவர்கள் செல்வாம்பாளும், அவளுடைய காதலனாகிய தனபாலனும், அவள் வேலைக்காரியாகிய அன்னமுமே. அவர்கள் ஒரு முக்கிய காரியத்தை உத்தேசித்து அங்கே வந்தார்கள். இதனாலேயே பிச்சையன், மேற்கூறியபடி 'செல்வாம்பாளைப் பற்றி ஞாபகமிருக்கிறதா' என்று பெரியசாமியிடம் வினவினான். அவன் அவ்வாறு கேட்டதும், அச்சுதன் அவளுடைய ஞாபகமாகவே ஆத்திரங்கொண்டிருந்தவனாதலால், தன்னுடைய கலவரங்களையெல்லாம் மறந்து, "ஆ! செல்வாம்பாள்!" என்று ஒரு சத்தமிட்டான். அதைக்கேட்டதும் பிச்சையன் அவன் பக்கம் திரும்பிப்பார்த்து அவனை அச்சுதனென்றுணர்ந்து, "ஓ! அச்சுதன் இங்கே—" என்று ஆச்சரியமுற்றான்.

அச்சுதனும் அவனைப்பார்த்து "ஓ! பிச்சையா! நீயா?" என்று சொல்லிவிட்டு மிகுந்த படபடப்புடன், "நீ செல்வாம்பாளைப் பார்த்தாயா?" என்று வினவினான்.

பிச்சையன்:—உனக்கு அவளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவசியமிருக்கும் பக்ஷத்தில் நான் சொல்லுகிறேன்; அவள் இப்பொழுதுதான், தன்

காதலனோடும், வேலைக்காரியோடும் வண்டியை விட்டிறங்கி ஹோட்டலின் முற்றத்தில் சென்றாள்.

அச்:—என்ன அதிசயசம்பவம்! நாமெல்லோரும் இங்கே ஓரிடத்தில் வந்து ஒன்று சேரவேண்டுமென்னும் விதியேற்பட்டிருந்தது போலும்! அவளுடன் வந்தவன் அவள் காதலனா?

பிச்சையனுக்கு அச்சுதனுடைய நடக்கையும், இக்கேள்வியும் அருவருப்பை யுண்டாக்கிய படியால், "அதை நீ அவளிடமே கேட்டுத்தெரிந்துகொள்" என்று சொல்லிவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டான். அதனால் அச்சுதனுக்கு அவன்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. எனினும் அச்சமயம் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனால் உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாமலிருந்தான். அப்படி ஐந்து நிமிஷம்வரை பிரமை கொண்டவன்போலிருந்து திடீலென்று செல்வாம்பாளுடைய ஆவலால் அவளைப்பார்க்க எண்ணங்கொண்டு, "செல்வாம்பாள் இங்கேயா வந்திருக்கிறாள்!" என்று பெருஞ்சத்தமிட்டுக்கொண்டு அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு வெளியில் ஓடினான்.

நாம் இனி அந்த ஹோட்டலின் வேறொரு பக்கத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனிப்போம்:—

மேலே பிச்சையன் கூறியபடி இறங்கிச்சென்ற செல்வாம்பாள் தன் காதலனோடும், வேலைக்காரி அன்னத்தோடும் போய் அந்த ஹோட்டலின் ஒரு விசாலமான அறையில் தங்கினாள். அவர்கள் நெடுந்தூரம் பிரயாணஞ்செய்து வந்ததால் தனபாலன் தன் உடைகளை மாற்றிக்கொள்ள வேறு ஒரு அறைக்குச் சென்றான். செல்வாம்பாளும் அவ்வாறே வேறுடை யணிந்துகொள்ள மற்றொரு அறைக்குத் தன் வேலைக்காரியுடன் சென்றாள். அப்போது செல்வாம்

பாளுடைய முகம் ஒருவிதமாக வாட்டமடைந்திருந்தது. அதனால் அவளை நோக்கி,

அன்னம்:—உன்னுடைய முகம் என் வாட்டமடைந்திருக்கிறது? உன்மனதில் ஏதோ கலவரமிருப்பதாகத் தெரிகிறது.

செல்:—அப்படியா! என் முகக்குறியால் அது விளங்குகிறதா? என் மனதில் கலவரமிருப்பது உண்மைதான்.

அன்:—என்ன கலவரம்?

செல்:—அதுவா? ஒரு கனாத்தோற்றமுண்டாயிற்று. அதைப் பற்றித்தான் ஒருவித கலக்கமுண்டாயிருக்கிறது.

அன்:—ஐயோ! கனவைப்பற்றியா கலக்கம்? கனவுதானே உண்டாயிற்று, வேறொன்றுமில்லையே? அதைப்பற்றி ஏன் விசாரப்படவேண்டும்.

செல்:—நீ சொல்வது உண்மைதான்; ஆயினும் கனவிற் கண்டதுபோல் சில காரியங்கள் நடப்பதுமுண்டு; அதேபோல் இந்தக்கனவும் பலிக்குமென்பதற்குச் சில அறிகுறிகளேற்பட்டிருக்கின்றன; அதனோடு இக் கனவு நெடுங்காலத்துக்கு முன்னும் தோற்றியிருக்கின்றது; நேற்றிரவும் தோற்றியிருக்கிறது. அதன் விவரத்தைக்கூறுகிறேன்; ஆதியில் என் சகோதரி ஞானம்பாளும் நானும் சேர்ந்திருக்கும் காலத்தில் அந்தக் கனவு என் தூக்கத்தில் ஏற்பட்டது; அதில் ஒரு மலர் மாலையுள்ள பெட்டியொன்று ஞானம்பாளுக்குக் கிடைத்ததாகவும், எலும்பு நிறைந்தபெட்டியொன்று எனக்குக் கிடைத்ததாகவும் நான்கண்டேன். அதைப் பற்றி நானும் ஞானம்பாளும் பேசத் தொடங்கியதில் நான் அவளுக்கு மலர் மாலைப்பெட்டி கிடைத்ததால் அவளுடைய வாழ்க்கை பரிசுத்தமுடையதாகவும், இனிமையானதாகவும் நடைபெறுமென்றும், எனக்கு

எலும்புப்பெட்டி கிடைத்ததால் என்னுடைய வாழ்க்கை அசுத்தமுள்ளதாயும் திருப்தியற்றதாயும் கழிந்து விரைவில் முடிந்து நானும் எலும்பாகிவிடுவேனென்றும் சொன்னேன். அதன்படியே அவளுடைய வாழ்க்கை பரிசுத்தமுடையதாய் நடந்தேறி வந்திருக்கிறது; அவள் இப்போது பெரிய சீமாட்டியாய்க் கமலாபுரம் ஜமீன்தாராகிய தேவராஜப்பிரபுவை மணந்துகொள்ளும் நிலையிலிருக்கிறாள்; என்னுடைய வாழ்க்கையோ இதுவரை அசுத்தமானதாய்க் கழிந்து வந்திருக்கிறது. இந்த அனுபவங்களை ஆலோசிக்கும்போது எனக்கு முடிவும் சமீபத்திலிருக்கும் என்ற ஒருநம்பிக்கை யுண்டாகிறது. அதனோடு அக்கனவு நேற்றிரவு மீண்டும் உண்டானபடியால் அம்முடிவு சமீபத்திலேயே நேரக்கூடும் என்னும் எண்ணமுண்டாயிற்று. அதனாலேயே எனக்குக் கலக்கமேற்பட்டது. நான் அந்தக் கலக்கத்தை நீக்க எவ்வளவு முயன்றாலும் அது முடியவில்லை. என் காதலரும் என் முகவாட்டத்தைக்கண்டு அதன் காரணத்தை என்னிடம் வினவினார். நான் அதற்கு வேறு சமாதானம் கூறிவிட்டேன். இதைப்பற்றி எப்படிக் கலங்காமலிருக்க முடியும்?

அன்:—ஐயோ! ஒரு சொப்பனத்திற்காகவா நீ இவ்வளவு திகிலடைகிறாய்! இது வீண் பைத்தியம்; சில சொப்பனங்களின்படி காரியம் நடப்பது உண்மைதான்; ஆனால் அந்தக்கனவுகள் அக்காரியத்தை முன்னாலேயே அறிவிக்கின்றன என்பது நம்பத்தகுந்ததல்ல; கனவு கண்டதற்குப்பின் சில செய்கைகள் அதற்கொற்றுமையாக இயற்கையில் நடந்து விடுகின்றன; அவற்றை அக்கனவு முந்தியே அறிவித்து விட்டதென்று சில ஜனங்கள் நம்பிக்கொள்ளுகிறார்கள். நீயும்

அவ்வாறு நம்புவது மதியீனம்; எதுவும் கடவுள் கட்டளைப்படியே நடக்கும்; முந்தின எண்ணங்களே தூக்கத்தில் கனவாகத்தோன்றும்; நீ முந்தின கனவைப் பற்றி அடிக்கடி நினைத்துக்கொண் டிருப்பாய்; அந் நினைவே இப்பொழுதும் கனவாகத்தோன்றி யிருக்கும். நீ அந்த பீதியை விட்டுவிடு; உன் நடக்கை யொருவிதமாயிருந்தாலும் உனக்கிப்போது சௌக்கியத்தில் ஒன்றும் குறைவில்லை; நீயோ உன் காதலருடன் இங்கே சந்தோஷங்கொண்டாட வந்திருக்கின்றாய்; அப்படி யிருக்கும்போது அதற்கு விரோதமாய் உன் புத்தியை வீண்பீதியிற்செலுத்தி விசனத்திற் கிடங்கொடுப்பது சரியன்று; உன்னால் உன் காதலர் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்து வருகிறார்; அப்பேர்ப் பட்டவர்க்கு இப்போது நீ அடைந்திருக்கும் நிலைமை மிக்க விசனத்தை உண்டாக்கும்; ஆதலால் இவ்விசனத்தை யொழித்துவிடு; நீ சந்தோஷமான முகத்தோடு உன் நாயகருடன் போசனமுண்ணுதற்குச் சென்றால் அவர் மிகுந்த களிப்படைவார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் செல்வாம்பாளுக்குச் சற்றுத் தெளிவுண்டாயிற்று. அதனால் அவள் அவ்வாறு பீதியடைந்தது பைத்தியக்காரத்தனமென்று அவளுக்குத் தெரிந்தது. அதன்மேல் அவள் அன்னத்தை நோக்கி, "நீ சொல்கிறபடி நான் வீண்கலவரமே யடைந்தேன்; இது மிக்க மூடத்தனம்; இனிநான் என்காதலருக்கு மனவருத்தத்தை யுண்டாக்கமாட்டேன்; அவர் சந்தோஷத்தை யடையும்படி நடந்துகொள்வேன்; அந்தக் கலவரத்தை யெல்லாம் அடியோடு விட்டுவிட்டேன்; இன்னும் கொஞ்சநேரத்தில் நானும், என்காதலரும் அளவற்ற மகிழ்ச்சி யடைவோம்" என்று கூறினாள். அதன்மேல்

அன்னம் அவளுக்கு நல்ல உடைகளை அணிந்து என்றுமில்லாத அலங்காரத்தைச் செய்துவிட்டாள். செல்வாம்பாள் நிலைக்கண்ணுடியில் தன் உருவத்தைப்பார்த்தாள். அவளுடைய முகத்தில் என்றுமில்லாத அழகு ஜொலித்துக்கொண்டிருந்தது. அன்று அவளுடைய அலங்காரமும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அவ்வாறு தன் அழகு மிகச் சிறப்பாய் அமைந்திருந்ததைப் பார்த்தவுடன் செல்வாம்பாள் அன்னத்தை நோக்கி, "நீ இன்று என்னை அலங்கரிக்கும் விஷயத்தில் மிக்க சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிருய்; என்றுமில்லா அழகு இன்று என்னிடம் குடிகொண்டிருக்கிறது; இன்று என்னைப்பார்த்தவுடன் என் காதலர் மிகுந்த சந்தோஷத்தை அடைவார்" என்று கூறினுள். அந்தோ! மனிதர் நிலையற்றவாழ்வில் என்ன திருப்தி யடைகிறுர்கள்! இவர்களுடைய வாழ்வும் மகிழ்ச்சியும் நீடித்து நிற்பனவல்லவென்பதை இவர்கள் சிந்திப்பதில்லை. அவள் அவ்வாறு சந்தோஷமான வார்த்தைகளைக் கூறியவுடனே அன்னமும் மகிழ்ச்சியடைந்து புன்னகைபுரிந்தாள்.

அதன்மேல் செல்வாம்பாள் 'நான் போஜன அறைக்குச் செல்கிறேன்' என்று புறப்பட்டு அவ்வறையின் கதவைத்திறக்க அதை நோக்கிச் சென்ருள்.

இவள் செய்தி இப்படியிருக்க. 'செல்வாம்பாள்' என்று சொல்லிக்கொண்டு பைத்தியம் பிடித்தவன் போல் வெளியேறி ஓடிவந்த அச்சுதன் ஹோட்டல் காரனிடம் சென்று 'இப்போது புதிதாக இங்கே வந்தவர்கள் யார்?' என்று விசாரித்தான். அவன் 'செல்வாம்பாள் முதலியவர்களே வந்தார்கள்' என்று சொன்னுன். அவன் வார்த்தையால் செல்வாம்பாள் அங்கே வந்திருக்கிருளென்பதை அச்சுதன் நிச்சயமாகத் தெரிந்து கொண்டான். அவனுக்கு எப்படியாவது அவளைப் பார்த்தே தீரவேண்டுமென்னும் ஆத்திர

முண்டாயிற்று. இதனால் அவன் பித்தம் பிடித்தவன் போல் சிறிது நேரம் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்து பின் ஹோட்டல் வேலைக்காரனாகிய ஒருவனிடம் போய் 'இப்போது புதிதாக வந்தவர்கள் எங்கேயிருக்கிறார்கள்?' என்று வினவினான்.

அவன் செல்வாம்பாள் இருக்குமிடத்தைக் கூறினான். உடனே அச்சுதன் செல்வாம்பாள் உடுப்பணிந்துகொண்டிருந்த அறைக்கு நேரே சென்ற ஒரு சந்து வழியிற் சென்றான். அப்போது தனபாலனும் போசன உடையணிந்துகொண்டு போசன அறைக்குச் செல்வதற்குத் தன்னுடைய உடுப்பறையிலிருந்து வெளியேறி அந்தச் சந்துவழியிற் குறுக்காக வந்து சேர்ந்தான். அப்போது அச்சுதன் எதிரில் வந்தான். அவனைப்பார்த்ததும் அவனுடைய நடக்கையில் தனபாலனுக்குச் சந்தேகமுண்டாயிற்று. அதனால், அவனை நோக்கி,

தனபாலன்:—என்ன காரியமாக நீ இங்கு இவ்வாறு திடீரென்று பிரவேசிக்கிறாய்?

அச்சுதன்:—உன்னிடத்தில் எனக்கொரு காரியமுமில்லை.

தன:—அஃதிருக்கட்டும்; உன் பெயர் என்ன?

அச்:—என் பெயரை நீ தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை.

தன:—என்ன! நீ எதற்கும் முரட்டுத்தனமான பதிலே கூறுகிறாய்; வம்பிழுக்கப் பிரியப்படுகிறாயோ? அப்படியானால் ஒரு கை பார்ப்போம். ஆனால் அது கௌரவமான செய்கையில்லை. நீ முரட்டுத்தனமாகப் பேசுவதும் நல்ல செய்கையல்ல.

அச்:—வாஸ்தவந்தான். நான் இப்படிப் பேசியிருக்கக் கூடாது; இதைப்பற்றி நீ மன்னித்துக்கொள்; நான் வந்த காரியத்தைச் சொல்லுகிறேன்; இங்கே ஒரு

பெண் வந்திருக்கிறாள்; அவளிடத்தில் என்மரியாதை யைக் காட்டிக் கொள்வதற்கு வந்தேன்; அவள் செல்—வா—ம்—இப்பொழுதென்ன பெயர் வைத்துக் கொண்டிருக்கிறாளோ தெரியாது.

தன:—நீ அவளுக்குச் சிநேகிதனுயாவது அறிமுகமுள்ளவனுயாவதிருந்தால் உன் பெயரைக்கூறு.

அச்:—என் பெயரா? அச்சுதன்.

இந்தப் பெயரைக் கேட்டதும் தனபாலனுக்குத் தான் கிரீபுரத்தில் செல்வாம்பாளின் தூண்டுதலால் இவனைக் கைதி செய்தது ஞாபகத்திற்கு வந்தது. அவ்வாறு நினைவிற்கு வந்தவுடனே அவனுடைய அயோக்கியத் தனத்தைப்பற்றி அவன்மீது மிகுந்த அருவருப்பும் கோபமுமுண்டாயிற்று. அதனால் அவனை நோக்கி,

தனபாலன்:—ஓ நீயா! அவள் உன்னைப்பார்க்க இஷ்டப்பட மாட்டாள். நீ வெளியிற் போய்விடு.

அச்சுதன்:—நான் அவளைப்பார்க்காமல் போகமாட்டேன்.

தன:—ஏ! பைத்தியக்காரா! உளறாமல் வெளியே போ.

அச்:—நான் போகமாட்டேன்; செல்வாம்பாளிடமே செல்வேன்; நீ வழியைவிட்டு ஒதுங்கிநில்.

தன:—பேசாமல் திரும்பி வெளியில்நட; எனக்கு ஆத்திரமுண்டுபண்ணிஞயோ—!

அச்:—“ஒதுங்குகிறாயா இல்லையா; ஒதுங்காவிட்டால் இதை ஏற்றுக்கொள்” என்று மிகுந்த ஆத்திரத்தோடு தன் கைத்துப்பாக்கியை எடுத்து அவன் நெஞ்சுக்கு நேரே திருப்பினான்.

அப்போதுதான் மேற்கூறியபடி செல்வாம்பாள் உடுப்புடுத்திக்கொண் டிருந்த அறையிலிருந்து போஜன அறைக்குச் செல்வதற்குக் கதவைத்திறக்க அதன் பக்கம் சென்றாள். அப்போது அச்சுதனும் தனபாலனும் இங்

குரைத்தபடி வாக்குவாதம் செய்துகொண்ட சப்தம் அவள் காதில் விழுந்தது. அவள் அதைக்கேட்டதும், "இதென்ன! வெளியில் சச்சரவு!" என்று அவசரமாக அக்கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள். அந்தோ! பரிதாபம்! அச்சுதன் தனபாலன் மார்புக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டவே அவன் விரைந்து பக்கத்தில் விலகினான். டுமீல் என்று வெடிகிளம்பியது. ஆ! என்று கதறிக்கொண்டு செல்வாம்பாள் கீழே சாய்ந்துவிட்டாள். ஏனெனில் அச்சுதன் தனபாலனைப் பார்த்துச்சுடவே அவன் விலகியதும் செல்வாம்பாள் அதற்கு நேரே வந்தபடியால் குண்டு அவள் மார்பில் பாய்ந்துவிட்டது. செல்வாம்பாள் உடனே சவமாகி விட்டாள்.

உடனே தனபாலன் மிகுந்த பதற்றத்துடன் "ஆ பாவி! கொன்றுவிட்டாயே!" என்று விரைந்தோடிச் செல்வாம்பாளைத் தூக்கி மார்பில் சாத்திக்கொண்டு, "ஐயோ! சண்டாளன்! கொன்று விட்டான்! கொன்று விட்டான்!!" என்று கதறினான். அச்சுதன், செல்வாம்பாள் சவமாய் வீழ்ந்ததைப் பார்த்தவுடன் மிக்க பீதியடைந்து அசைவற்றுச் சிறிது நேரம் அவளைப்பார்த்தபடியே பிரமித்து நின்று உடனே ஒரு துணிவுகொண்டு தன் கைத்துப்பாக்கியின் மற்றொரு குண்டுள்ள குழாயைத் தன் கழுத்தில் வைத்து வெடிகிளப்பித் தானும் தடாலென்று சவமாய் வீழ்ந்தான்.

199-வது அத்தியாயம்

ஞானம்பாளுக்கும், தேவராஜுலுவுக்கும், அவர்கள் நாட்டாசாரப்படி திருமணம்—கதையின் முடிவு.

முன் உரைத்தபடி திரிபுரத்தில் இராஜபேட்டி கண்டு தங்கியிருந்த தேவராஜுலுப்பிரபுவும், ஞானம்பா

ளும் ஒரு நல்ல தினத்தில் கலியாணச் சடங்கை அந்நாட்டு முறைப்படி நிறைவேற்றிக் கொள்ளுதற்கு மாதா கோவிலுக்குப் போனார்கள். இரண்டு பெண்கள் ஞானம்பாளுக்குக் கலியாணத் தோழிகளாயிருந்தார்கள். மச்சநாதம் பிரபுவும், தேவராஜின் தாயாரும், மார்க்கபந்துவும், அவன் மனைவி கிருஷ்ணபாயும், துரைரத்தினமும், அவன் மனைவி பூங்காவனமும், இந்திரபுரி மந்திரியும், பிரஞ்சு மந்திரியும், அத்தேயத்தரசரும், தேவராஜின் முக்கிய நண்பர்களாகிய பிரபுக்களும் அங்குப்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது மச்சநாதம் பிரபுவுக்கும், தேவராஜின் தாயாருக்கும் உண்டான சந்தோஷத்திற்களவேயில்லை. இவர்களுக்கு முன்னிலையில் ஞானம்பாளுக்கும், தேவராஜனுக்கும் திருமணச் சடங்கை, குரு முறைப்படி நிறை வேற்றி வைத்தார். மணச் சடங்கு நிறைவேறியதும் மணமகனும், மணமகளும் அங்குக் கூடியிருந்தவர்களோடு தாங்கள் இறங்கி யிருந்த ஹோட்டலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். அந்நகரத்திலுள்ள உயர்ந்த அந்தஸ்துடைய பல பெண்கள், தேவராஜன், ஞானம்பாள் இவர்களின் நற்செய்கைகளுக்கும், வனப்பிற்கும், கீர்த்திக்கும், மகிழ்ந்தவர்களாய், அங்கு வந்து கூடி அவர்களுக்குப் புஷ்பச் செண்டுகள் கொடுத்து அவர்களைக் கொண்டாடினார்கள். இன்னும் பலரும் வந்து அவர்களுக்குச் சந்தோஷ வார்த்தைகள் கூறினார்கள். அந்தக் கலியாணம் சகலருக்கும் சந்தோஷத்தை அளித்தது.

அதன்மேல், தேவராஜன்ப்பிரபுவும், ஞானம்பாளும் மணக்கோலத்துடன், மச்சநாதம்பிரபுவோடும், தேவராஜின் அன்னையுடனும், மற்ற பரிவார ஜனங்களுடனும் புறப்பட்டுத் தங்கள் சொந்த ஜமீனாகிய கமலாபுரம் வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள ஜனங்கள் அதிக குதூகலத்துடன் அவர்களை வரவேற்றார்கள். அவர்கள் நகரத்திற்குட் பிரவே

சிக்கும்போது இராக்காலமாயிருந்தபடியால் தெருக்களெல்லாம் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன; இன்னும் பந்தல்களாலும், மாலைகளாலும், தோரணங்களாலும், வேறு பலவற்றாலும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன; பற்பல வாத்தியங்கள் முழங்கின; ஆங்காங்கே கூடி வேடிக்கை பார்த்த ஜனங்கள் மணமகன் மீதும், மணமகள் மீதும் மலர்களை வாரியிறைத்தார்கள்; சந்தோஷ ஆரவாரஞ் செய்தார்கள். நகரசங்கத்தார் தேவராஜனுக்கும், ஞானம்பாளுக்கும், வரவேற்புப் பத்திரமொன்று வாசித்தார்கள். இவ்வித ஆடம்பரங்களுடன் சென்ற தேவராஜனும், ஞானம்பாளும், தங்கள் உயர்ந்த மாளிகையிற் சேர்ந்து பற்பல இன்பங்களை நுகர்ந்து இந்திரபோக மனுபவிப்பவர்களைப் போன்று சுற்றத்தாருடன் சந்தோஷமுற்றிருந்தார்கள்.

இவர்கள் செய்தி இப்படியிருக்க, செல்வாம்பாளும் அச்சுதனும் துப்பாக்கிக்குண்டால் இறந்தபோது, பெரிய சாமியும், பிச்சையனும் தங்களுக்கேதேனும் ஆபத்துண்டாகுமென்று பயந்து மாயமாய் மறைந்தோடி விட்டார்கள். தனபாலன் செல்வாம்பாளை அடக்கஞ் செய்துவிட்டுத் தன் தேசத்திற்குப் போய்விட்டான். அச்சுதன் சவம் நகர சங்கத்தாரால் எடுத்தடக்கஞ் செய்யப்பட்டது. அன்னம், தன்மேல் மிகவும் பக்ஷமாயிருந்த செல்வாம்பாள் இறந்ததைப்பற்றி மிகுந்த வியாகூலமுற்று, ஞானம்பாளும் தேவராஜனும்ப்பிரபுவும் மணமுடித்துக்கொண்டு கமலாபுரம் வந்து சேர்ந்த சில வாரங்களுக்குப்பின் அங்கு வந்து சேர்ந்து ஞானம்பாளிடம் செல்வாம்பாளுடைய மரணத்தைக் கூறினாள். தன்னுடைய சகோதரி அவ்வாறு துர்மரணமடைந்ததற்காக ஞானம்பாள் மிகவும் மனங் கலங்கிக் கண்ணீர்விட்டழுதாள். ஆனால், இத் துக்கம் அதிகநேரம் அவள் மனத்தில் நிற்கவில்லை. பரிசுத்தமான ஆகாயத்தில் ஒரு சிறிய

மேகந் தோன்றிச் சிக்கிரம் மறைந்து விடுவதுபோல அவ ளுடைய ஆனந்த அனுபவங்களுக்கிடையில் சிறிது தோன்றி மறைந்து விட்டது. ஞானம்பாள் அன்னத்தைத் தன்னிடத்திலேயே வேலைக்கு வைத்துக்கொண்டாள். கொஞ்ச காலத்திற்குப்பின் அவள், ஞானம்பாள், தேவ ராஜன் இவர்களின் உதவியால் நற்குணமும், ஐசுவரியமும் உள்ள ஒரு வியாபாரியை மணந்து சௌக்கியமுற்றிருந் தாள். இலட்சுமி உலகையனை மணந்து கொண்டு இன் பத்தை யடைந்திருந்தாள். உலகையன் ஒருகாலத்தில் வாலிப விளையாட்டில் நெறிதவறி யிருந்தாலும் இப்போது நெறியுடையவனாய் இலட்சுமியுடன் இல்வாழ்க்கை நடத்தி இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

தேவராஜனும், ஞானம்பாளும் கலியாணஞ்செய்து கொண்டு கமலாபுரத்தை யடைந்த ஒரு வருஷத்துக்குப் பின், துக்காபாய் என்னும் பெயருடன் மடத்தில் சேர்ந் திருந்த சுந்தராபாய் இராஜகுமாரத்தி இறந்து போய்விட் டாள். அதன் மேல் மீராபாய் என்னும் பெயருடன் அம் மடத்திலேயே சேர்ந்திருந்த மீனாட்சிச்சீமாட்டி தன் இருப் பிடத்தைப்பற்றி ஞானம்பாளுக்கு ஒருமுறை கடிதமெழுதி னாள். அதைப் பார்த்தபின் தேவராஜனும் ஞானம்பாளும் அவளிடம் சென்று சுந்தராபாய் இறந்த துக்கத்தை விசா ரித்துப் பரிவான வார்த்தைகள் கூறி அவளுடைய உயர்ந்த குணங்களைக் கொண்டாடிவிட்டு வந்தார்கள். அதன் மேல் அவர்கள் எந்தச் சமயத்தில் சென்னூருக்குச் சென் றாலும் மீனாட்சியைப் பார்க்காமல் வருவதில்லை.

அச்சுதன் இறந்த கொஞ்சகாலத்திற்குப்பிறகு திர வியகாதம் பிரபுவுக்கு அச்சமாசாரம் எட்டியது. அவருக்குத் தம் மகளுமிறந்து மனைவியுமிறந்து, மகனுமிறந்ததைப்பற்றி ஆற்றொணாத் துயாமுண்டாயிற்று. சில தினங்கள் வரை

அவ்விசனம் அவர் மனத்தைவிட் டகலவில்லை. அதன் மேல் அது சிறிது தணிந்து அவர் மனதிற்கு ஒருவகைச் சமாதான முண்டாயிற்று.

பின்னர் அவருக்கு ஒருவித எண்ணமுண்டாயிற்று. அவர் அதைச் செய்துகொள்வது நல்லதென்று நினைத்தார். ஆதலால், ஒருநாள் மச்சநாதம்பிரபு தனியாயிருக்கும்போது அவரைச் சந்தித்து அவரிடத்தில் தாம் கருதியதைச் சொல்லி, 'இதைச் செய்யலாமா?' என்று கேட்டார். அதற் கவர், 'செய்வது நல்லதுதான்' என்று சொன்னார். அந்த விஷயமென்ன வென்றால், இந்தத் திரவியநாதம் பிரபுவே நம் தேவராஜுப்பிரபுவுக்குத் தந்தையென்பதையும், இவர் தேவராஜின் தாயாரை மணஞ் செய்துகொள்வதாகச் சொல்லி அவளுடன் உறவாயிருந்து தேவராஜு அவள் கருப்பத்தில் தமக்கே உற்பத்தியானபின் அவளைக் கைநழுவ விட்டுவிட்டாரென்பதையும், எப்படி யிருந்தாலும் திரவிய நாதம்பிரபுவே தேவராஜின் தாயாருக்கு நாயகரென்பதை யும், இதை வாசிக்கும் நண்பர்கள் முன்னேரிடத்தில் படித் துணர்ந்திருக்கலாம். இவ்வாறு திரவியநாதம்பிரபு தேவ ராஜுக்குத் தந்தையாயிருந்ததால், தம்மைச்சார்ந்த மனைவி மக்கள் எல்லோரும் இறந்து தனிப்பட்டவுன், தேவராஜு வுக்குத் தாமே தந்தையென்பதை வெளிப்படுத்தி அவன் குடும்பத்தோடு சேர்ந்துகொள்ள விரும்பினார். தம்முடைய விஷயம் மச்சநாதம் பிரபுவுக்குத் தெரியுமாதலால், அவ ரிடத்தில் தாம் கருதிய இவ்விஷயத்தைக் கூறி இதற்கு அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டார்; அவர், செய்ய லாமென்று அபிப்பிராயஞ்சொன்னார்.

அதன்மேல் திரவியநாதம்பிரபுவின் அபிப்பிராயத்தை மச்சநாதம்பிரபு தேவராஜின் தாயாரிடம் தெரிவித்தார். அவள் சந்தோஷமாக அதை ஏற்றுக்கொண்டாள். பின்பு

ஒருதினம் மச்சநாதம்பிரபு, திரவியநாதம் பிரபுவைத் தேவ ராஜின் மாளிகைக் கழைத்துக்கொண்டு போனார். தேவ ராஜு அப்போதும் திரவிநாதம்பிரபுவைத் தன் தந்தை யென்றுணராமல் வேறு பிரபுக்களை வரவேற்பதுபோல் வரவேற்றான். அப்போது, தேவராஜின் தாயார், ஞானம் பாள் முதலியவர்களும் அங்கிருந்தார்கள். திரவியநாதம் பிரபுவைக் கண்டவுடன் தேவராஜின் தாயார் ஒருவித நாணத்துடனும், விசனத்துடனும் தலைகுனிந்திருந்தாள். அத்தருணத்தில் மச்சநாதம் பிரபு, தேவராஜினிடத்தில், அவன் தாய்க்கும், திரவியநாதம் பிரபுவுக்குமுள்ள இர கசிய விவாக சம்பந்தத்தையும், திரவியநாதம் பிரபுவே தேவராஜுக்குத் தந்தையென்பதையும், மற்ற சரித்திரங் களையும் விவரமாகக் கூறினார். தன் தந்தையின் வரலாறு சரியாகத் தெரியாமல் தாயிடம் கேட்டும் அவள் விவரம் கூறுமையால் அவர் இறந்து விட்டாரென்று கருதியிருந்த தேவராஜு, திரவியநாதம்பிரபுவே தன் தந்தையென் றுணர்ந்தவுடனே தான் இயற்கையிலேயே பிரபுவமிசத் தானகியதைப்பற்றி அளவிலா ஆனந்த சாகரத்தில் மூழ்கித் திரவியநாதம் பிரபுவை மார்புறத்தழுவி அவரிடம் அன்பான வார்த்தைகளைக்கூறினன். ஞானம்பாள் தன் மாமனருக் குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்தாள். தேவ ராஜின் தாயாரும் திரவியநாதம் பிரபுவின் மீதேற்பட் டிருந்த பழைய மனஸ்தாபங்களை விடுத்து அவரை உபசரித் தாள். பின் தந்தையின் வரவை உத்தேசித்து தேவராஜு பெரிய விருந்தொன்று நடத்தினன்; பல சீமான்களும் சீமாட்டிகளும் வந்து விருந்துண்டு தேவராஜு முதலியவர் களை வாழ்த்திச் சென்றார்கள்.

நீலாட்சிக்குச் சில மாதங்கள் சென்றபின் அச்சுதன் இறந்த செய்தி எட்டியது. அவள் அவனல் சீமாட்டி

யென்ற பட்டம் பெறலாமென்று நினைத்து கொண்டிருந்த எண்ணம் அடியோடு தொலைந்தது. அவளுடைய வீண் ஆசைகளெல்லாம் நிறைவேறாமல் போய்விட்டன. அவளின் வாழ்நாள் துக்கத்துடன் கழிவதாயிருந்தது. அவள், தன் பெரிய தந்தையிடம் மிரட்டுதல் செய்து வாங்கிய பணத்தை வைத்துக் கொண்டு அமங்கலியாய் ஆடம்பரமில்லாமல் காலங்கழித்து வந்தாள்.

தேவராஜு, தன் உயிர் போன்ற மனைவியாகிய ஞானம்பாளுடனும், தாய்தந்தையருடனும், மாமனாருடனும் கமலாபுரத்தில் பலரும் விரும்பிக் கொண்டாட மிக்க ஆனந்தத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தான். உண்ணாமுலையும், சிங்காரம் பிரபுவும் அடிக்கடி அங்கே வந்து தேவராஜு முதலியவர்களைப்பார்த்துச் சந்தோஷங் கொண்டாடிப் போகும் வழக்கமுடையவர்களாயிருந்தார்கள். தேவராஜின் வாழ்வு தேவராஜனாகிய இந்திரனுடைய வாழ்வைப் போலவே சிறப்புற்று விளங்கிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஞானசெல்வாம்பாள்

அல்லது

இரண்டு சகோதரிகள்

ஐந்தாம்பாகம் முற்றிற்று.

186505

"ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், சென்னை.

சென்னை-600 008

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தனபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தகக திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன வென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்.

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமிமுதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால்; டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரிக்காப்பி இனும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும்	4	0	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும்	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை	2	0	பத்மாஸனி	0	14
மின்சார மாயவன்	1	8	வீரநாதன்	0	12
தேவசுந்தரி	1	4	குணசுந்தரன்	0	12
கனகபூஷணம் 2-பாகமும்	3	8	மஞ்சள் அறையின்மர்மம்	1	8
சுவர்ணம்பாள்	0	12	கமலசேகரன்	1	12
ஆனந்தவிங்	2	0	பூங்கோதை	0	10
மதனபூஷணம்	1	0	இந்திராபாய்	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	10	0	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the “Ananda Bodhini” Press Madras.